புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்

இலங்கை



# ஆண்டறிக்கை

# 2017

# ஆண்டறிக்கை

# 2017

**புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்**
இல 569, எப்பிட்டமுல்ல வீதி, பிட்டகோட்டே
தோலைபேசி : 011 2886289 / 0112886290
தோலைநகல் : 001 2886273
மின்னஞ்சல் : கைழளுபளஅடி.பழஎ.டம
இணையத்தளம் : www.gsmb.gov.lk

# நிறுவனம் சார்ந்த தகவல்கள்

## பொதுவான தகவல்கள்

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் 1992ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க சுரங்கங்கள்,கனிப்பொருட்கள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு நியதிச்சட்ட நிறுவனமாகும். அதன் தலைமை அலுவலகம் பிட்டகோட்டே, எப்பிட்டமுல்ல வீதி இல 569இல் அமைந்துள்ளது. இது 16பிராந்திய அலுவலகங்களைக் கொண்டுள்ளதுடன் அவை அம்பாறை, அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, கொழும்பு, கம்பஹா, அம்பாந்தோட்டை, பாழ்ப்பாணம், களுத்துறை,கண்டி, குருனாகல், மாத்தறை, மொனராகலை, பொலனறுவை, இரத்தினபுரி, திருகோணமலை ஆகிய நகரங்களிலும் ஹசலக்க மற்றும் கந்தளாய் நகரில் இரண்டு உப அலுவலகங்களும் காணப்படுகின்றன.

# நோக்கும் நோக்குப் பணியும்

## எமது நோக்கு

புவிச்சரிதவியல் சார்ந்த தகவல்களை ஆய்ந்தறிந்து பரப்புகின்ற அத்துடன் இலங்கையில் கனிம வளங்கள் தோண்டியெடுக்கும் செயற்பாட்டினை நிலைபேறான வகையில் ஒழுங்குபடுத்தும் பிரதான தேசிய புவிச்சரிதவயில் முகவராண்மையாகத் திகழ்தல்

## நோக்குப் பணி

கொள்கை வகுப்பாளர்களுக்கும் மக்களுக்கும் புவிச்சரிதவியல் சார்ந்த தகவல்கள், ஆலோசனைகள் மற்றும் சேவைகளை வழங்குதல் அத்துடன் சுற்றாடல் ரீதியாக நிலைபேறான தன்மையைப்பேணுவதற்கு பொறுப்பாக நின்றும் பொருளாதார அபிவிருத்தியை முன்னிட்டும் நாட்டிலுள்ள கனிம வளங்களை முகாமைத்துவம் செய்து மேம்படுத்தல் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் அரும்பணியாகும். கனிப்பொருள் அகழ்வு, பிரித்தெடுத்தல், பெறுமதி சேர்த்தல், இடம்பெயர்த்தல் மற்றும் வியாபாரம் செய்தலை ஒழுங்குபடுத்தலும் பணியகத்தின் பணியாகும்.

# புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் பணிகள் பின்வருமாறு:

- இலங்கையில் புவிச்சரிதவியல் தேசப்படங்களை முறையாக தயாரிக்கும் பணியைப் பொறுப்பேற்றல் மற்றும் புவிச்சரிதவியல் தேசப்படங்களைத் தயாரித்தல்.
- இலங்கையில் கனிம வளங்களை இனங்கண்டு அவற்றை மதிப்பீடு செய்தல்.
- கனிப்பொருட்களைத் தோண்டியெடுத்தல், பதனிடுதல் மற்றும் ஏற்றுமதியின் வர்த்தக ரீதியாக நிலைக்குந்தன்மையை மதிப்பீடு செய்தல்.
- உரிமங்களை வழங்குவதன் மூலம் கனிப்பொருட்களை அகழ்ந்தெடுத்தல், தோண்டுதல், பதனிடுதல், வியாபாரம் செய்தல் மற்றும் ஏற்றுமதியை ஒழுங்குபடுத்தல்.
- வர்த்தக அடிப்படையில் கனிப்பொருட்களைப் பிரித்தெடுத்தல், உற்பத்தி செய்வதற்காக பின்பற்ற வேண்டிய படிமுறைகள் தொடர்பில் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.
- இச்சட்டத்தின் கீழான பணிகளை நிறைவேற்றும்போது குறிப்பாக, சட்டத்தின் (அ), (ஆ) மற்றும் (இ) பந்திகளுக்கு ஏற்புடையதாக பெறப்படும் தரவுகளையும் தகவல்களையும் பொருத்தமான ஊடகத்தின் மூலமாக பிரசாரம் செய்தல்.
- புவிச்சரிதவியல் பொறியியல் கருத்திட்டங்களைப் பொறுப்பேற்றல் மற்றும் புவிச்சரிதவியல்சார் தீங்குகள் மற்றும் அழிவுகளுக்கான பரிகாரங்கள் தொடர்பாக ஆலோசனைகளைவழங்குதல்.

# பொருடக்கம்


| | |
|---|---|
| தலைவரின் செய்தி | 07 |
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | 08 - 09 |
| முகாமைத்துவக் குழு | 10 |
| சிரேஃட முகாமைத்துவம் | 10 |
| பணியகம் தொடர்பாக | 11 |
| பணியகத்துடன் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் | 13 |
| வரலாற்றுப் பன்னணியும் எதிர்காலத் திட்டங்களும் | 14 - 15 |
| பிரிவுசார் செயலாற்றுகை | |
| புவிச்சரிதவியல் பிரிவு | 16 -23 |
| சுரங்கப் பிரிவு | 23 - 29 |
| நிதிசார் மீளாய்வு | 30 |
| சட்டப் பிரிவு | 31 |
| மனித வளம் பற்றிய மீளாய்வு | 32 |
| தாபன நிருவாகம் | 33 - 34 |
| நிதிசார் அறிக்கைகள் | 35 - 40 |
| நிதிநிலை பற்றிய கூற்று | 41 - 42 |
| நிதிசார் செயலாற்றுகை பற்றிய கூற்று | 43 - 44 |
| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 45 - 58 |
| கணக்காய்வாளரின் அறிக்கை | 61 - 86 |
| கணக்காய்வாளரின் அறிக்கை - பதில்கள் | 89 - 98 |
| கணக்காய்வுக் குழு அறிக்கை | 99 - 101 |
| நிறுவனத்தின் சமூகப் பொறுப்புக்கள் | 103 - 106 |

# தலைவரின் செய்தி (2017)

புவிச்சரிதவியல் ஆய்வு சுரங்கப் பணியகத்தின் தலைவர் என்ற வகையில் 2017ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையின் பொருட்டு இச்சிறு செய்தியை எழுதுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். 2017 ஆம் ஆண்டில் பணியகத்தின் முக்கியமான நடவடிக்கைகள் மற்றும் சாதனைகளை சுருக்கமாகக் குறிப்பிடுவதற்கு இதனை வாய்ப்பாகக் கொள்கின்றேன்.

1992 ஆம் ஆண்டின் சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள செயல்பாடுகள் புவிச்சரிதவியல் ஆய்வு சுரங்கப் பணியகத்தின் (ஜி.எஸ்.எம்.பி) இரண்டு முக்கிய தொழில்நுட்பப் பிரிவுகளின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. தலைமையகம் மற்றும் 14 பிராந்திய அலுவலகங்கள் மூலம் அதன் சேவைகளை வழங்கும் சுரங்கப் பிரிவானது முக்கியமாக பணியகத்தின் ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளுக்கு பொறுப்பாகவுள்ளது. ஆய்வு, அகழ்வு நடவடிக்கைகள், கனிமப் போக்குவரத்து மற்றும் சுற்றுச்சூழல் கண்காணிப்பு ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதுடன் இணைக்கப்பட்டுள்ள பன்முகத்தன்மை மற்றும் சிக்கலான தன்மை என்பவற்றைக் கருத்திற்கொண்டு, இப் பிரிவானது ஒரு கடினமான சவாலை எதிர்கொள்வதாகக் கருதப்படுகின்றது. சுரங்கப் பிரிவானது இந்த ஆண்டில் சட்டவிரோத அகழ்வு நடவடிக்கைகளையும் சுரங்க நடவடிக்கைகளால் ஏற்படுத்தப்படுகின்ற சுற்றுச்சூழல் பாதிப்புகளையும் குறைப்பதற்காக கடுமையாக முயற்சித்துள்ளது. இந்த நோக்கத்துடன், சுரங்க அகழ்வுச் சமூகங்களையும் பொலீஸ் அதிகாரிகளையும் விளித்து பல விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

வரைபடங்கள் மற்றும் பிற வடிவங்களின் வடிவத்தில் முக்கியமான புவிசார்-தரவுகளை உருவாக்குவதும் பரப்புவதும் புவிச்சரிதவியல் பிரிவின் முக்கியமான செயற்பாடுகளாகும். 2017 ஆம் ஆண்டில், வழக்கமான மண் புவியிரசாயன வரைபடமாக்கம் குவாட்டர்னரி வரைபடமாக்கம் மற்றும் பிற நடவடிக்கைகள் முன்னேற்றமடைந்துள்ளதோடு, குவாட்டர்னரி வரைபடமாக்கத் திட்டத்தின் கீழ் 102 மீ ஆழத்திற்கு அருவாக்கலு பகுதியில் ஒரு குடைதுளை போடப்பட்டது. இவ்வைர உள் மையப்பகுதி துளையிடும் பயிற்சியின் நோக்கமானது மேற்பரப்பில் உள்ள செம்மண் படிவுக்கும், கீழே உள்ள மியோசீன் சுண்ணாம்புக்கும் இடையிலான பாறையடுக்கு உறவைப் புரிந்துகொள்வதாகும். முன்மொழியப்பட்ட மத்திய நெடுஞ்சாலை கருத்திட்டத்தின் கீழ் வைர மைய துளையிடும் சில ஒப்பந்தங்களையும் புவிச்சரிதவியல் பிரிவு பொறுப்பேற்றது. இந்த ஒப்பந்தங்களின் மூலமான மொத்த வருமானம் 23.8 மில்லியன் 'ரூபாவாக அமைந்தது.

2013 இல் அங்கீகரித்துக்கொள்ளப்பட்ட பதவியணிக்கான புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் (SOR) பொருட்டு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வது நிர்வாகப் பிரிவின் ஒரு முக்கியமான சாதனையாக அமைந்திருந்தது அதன்படி, புதிய பணியாளர்களை ஆடசேர்ப்புச் செய்வதற்காக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டது. நிதி ரீதியாக, பணியகமானது 2017 ஆம் ஆண்டில் மொத்தம் 5,569 மில்லியன் 'ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளதுடன் அதிலிருந்து 1,500 மில்லியன் 'ரூபா அரசாங்கப் பொக்கி'ங்களுக்கு மாற்றப்பட்டன. நல்ல நிதிசார் செயல்திறன் இருந்தபோதிலும், பல சந்தர்ப்பங்களில், பணியகமானது சுரங்க அகழ்வு நடவடிக்கைகளின் மோசமான சுற்றுச்சூழல் மற்றும் சமூக தாக்கங்கள் சம்பந்தமாக குறைகூறலுக்கு உள்ளாக்கப்பட்டு அதற்கான பொறுப்புக்கும் உட்படுத்தப்பட்டது. பணியகத்தின் பலம் மற்றும் பலவீனங்களின் பகுப்பாய்வானது உரிமத்திற்குப் பிந்தைய கண்காணிப்பு கணிசமாக வலுப்படுத்தப்பட வேண்டும் என்பதையும், சட்டவிரோத சுரங்க மற்றும் கனிம போக்குவரத்தைக் குறைப்பதற்கான ஒரு சிறந்த பொறிமுறையை அறிமுகப்படுத்த வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய பதவியணி கிடைப்பதன் மூலம் இந்த இலக்கினை அடையக்கூடியதாக இருக்கும் என நம்புகிறேன்.

இறுதியாக, புவிச்சரிதவியல் ஆய்வு சுரங்கப் பணியகமானது அதன் இலக்குகளை அடைவதில் 2017 ஆம் ஆண்டில் திருப்திகரமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது என்பதைக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன், மேலும் இந்த ஆண்டில் எடுக்கப்பட்ட முயற்சிகள் அடுத்த ஆண்டுகளில் அதிக சாதகமான முடிவுகளைத் தரும் எனவும் நான் நம்புகின்றேன்.

திரு.நிமல் போப்பகே
தலைவர்

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

காமைத்துவத்தினையும் பணியாட்டொகுதியினரையும் பிரதிநிதித்துவப்படுத்தி புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் (ஜி.எஸ்.எம்.பி) பணிப்பாளர் நாயகம் என்ற வகையில் 2017 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையின் பொருட்டு இச்செய்தியை எழுதுவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த அறிக்கையானது 2017 ஆம் ஆண்டில் பணியகத்தின் சில குறிப்பிடத்தக்க சாதனைகளை உள்ளடக்கியுள்ளது.

2017 ஆம் ஆண்டில் காணப்பட்ட முன்னேற்றத்தினை நாம் ஒரு குறிப்பிட்ட அளவு பெருமையுடன் நியாயமாக திரும்பிப்பார்க்க முடியும். பல மாற்றங்கள் இருந்தபோதிலும், ஜிஎஸ்எம்பியின் ஆரம்பத்திலிருந்து அதன் மிக உயர்ந்த பதிவு செய்யப்பட்ட இலாபத்தை அடைய முடிந்தது. பணியகமானது அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் பொதுத் திறைசேரிக்கு 1,500 மி.ரூபா பங்களிப்புச் செய்தல் என்பவற்றுடன் இந்த ஆண்டின் பணியகத்தின் மொத்த இலாபமாக 4,752,278,508 ரூபாவையும் பெற்றுள்ளது. கடந்த நிதியாண்டில் ஈட்டிய 1,564,027,187 ரூபாவிலான மொத்த இலாபத்துடன் ஒப்பிடுகையில் இது ஒரு கணிசமான வெற்றியாகும்.

கொள்கை வகுப்பாளர்களுக்கும் சமூகத்திற்கும் புவிசார் அறிவியல் தகவல்கள், ஆலோசனைகள் மற்றும் சேவைகள் என்பவற்றை வழங்குவதும், சுற்றாடல் ரீதியான நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்துகின்ற அதேவேளை பொருளாதார அபிவிருத்திக்காக நாட்டின் கனிம வளங்களை மேம்படுத்துவதும் நிர்வகிப்பதும் எமது நோக்குப் பணியாகும். இது கனிமங்களின் ஆய்வு, பிரித்தெடுத்தல், பெறுமதி சேர்க்கப்படுதல், போக்குவரத்து மற்றும் வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துகின்றது.

ஜி.எஸ்.எம்.பியின் புவியியல் பிரிவு 2017 பெப்ருவரி முதல் கட்டுமான மூலப்பொருள் ஆய்வொன்றினை மேற்கொண்டுள்ளது. இலங்கையில் இடம்பெற்று வரும் விரைவான அபிவிருத்திக் கருத்திட்டங்கள் காரணமாக ஏற்படுகின்ற கட்டுமான மூலப்பொருட்களின் பெரும் தேவையை பூர்த்தி செய்வதற்கும் அவற்றுக்கான எதிர்கால தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குமாக இந்த ஆய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அறுபது மில்லியன் (60 மி.ரூபா) ரூபா நிதி அனுசரணையுடனான வேண்டுகோளின் பேரில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இலங்கையின் முதல் தேசிய புவி இரசாயன அட்லஸ், (தொகுதி. ஈஎன்வி 1 தாள் 20: ரக்வான-தங்கல்ல) ஜிஎஸ்எம்பியால் 2017 இல் வெளியிடப்பட்டது. ஜிஎஸ்எம்பியினால் நடத்தப்பட்ட நாடு தழுவிய ரீதியான புவி இரசாயன வரைபடமாக்கல் திட்டத்தின் மீது அட்லஸ் அமைந்ததுடன் அது மண்ணின் புவி இரசாயனப் பண்புகளை ஆய்வு செய்வதற்காக முன்னெடுக்கப்பட்டது. இந்த வரைபடங்களனவை கனிம ஆய்வு, சுற்றுச்சூழல் கண்காணிப்பு மற்றும் விவசாய ஆராய்ச்சி மற்றும் புவி-சுகாதார அபாய ஆய்வுகளில் பயனுள்ளதாக இருக்கும்.

மாகாண கனிம ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் மாகாண கனிம வரைபடங்களின் தொகுப்பு ஆகியவை ஜி.எஸ்.எம்.பி.யின் மற்றொரு பிரதான செயற்பாடாகும். கனிமம் காணப்படுகின்ற புதிய இடங்களை அடையாளம் காண்பதற்காக சபராகமுவவின் புதிய மாகாண கனிம வரைபடத்தை வெளியிடுவதன் பொருட்டு பணியகம் சபராகமுவ மாகாணத்தை உள்ளடக்கிய ஒரு துரித மாகாண கனிம ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளது. இந்த ஆய்வு 2017 ஆம் ஆண்டின் முற்பகுதியில் நிறைவடைந்தது. மத்திய மலைப்பகுதிகளில் கார் மூலம் பரவும் காமா கதிர் ஸ்பெக்ட்ரோமீட்டரைப் பயன்படுத்தி ஐ.ஏ.இ.ஏ உதவி அணுக்கரு மூலப்பொருள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வானது மேற்கொண்டும் மேற்கொள்ளப்படுகின்ற மூன்று முக்கிய முரணிய கதிரியக்க வலயங்களைக் கண்டறிந்துள்ளது. 2017 ஆம் ஆண்டு தலைமன்னார் தொடக்கம் காலி வரை கடலோரப் பகுதியில் அணுசக்தி மூலப்பொருள் ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் ஏனைய முன்னுரிமைப் பணிகளுக்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டதால் சில பின்னடைவுகள் ஏற்பட்டன. ஆய்வானது 2018 ஆம் ஆண்டில் தொடரும்.

2017 ஆம் ஆண்டிற்கான பணியகத்தின் மொத்த வருமானம் சுமார் 5188 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன் வருமானத்தின் பெரும்பகுதி சுரங்கப் பிரிவினரால் பெற்றுத்தரப்பட்டது. சுரங்கப் பிரிவின் முக்கிய பணிகளில் தள ஆய்வு, வெடிக்கச் செய்தல்களுக்கான சோதனை, பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரித்தல், சுரங்க அகழ்வுக்கான உரிமங்களை விநியோகித்தல், வர்த்தகம், ஆய்வு மற்றும் போக்குவரத்து மற்றும் சட்டவிரோத அகழ்வு நடவடிக்கைகளை தடுத்தல் ஆகியவை அடங்கும். முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது வருவாய் அதிகரிப்பு 150% ஐத் தாண்டியுள்ளதுடன் அதற்கான முக்கிய காரணம் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் குறைப்பதற்குமான பணியகத்தின் முயற்சிகள் ஆகும்.

புவிச்சரிதவியல் ஆய்வு, சுரங்கப் பணியகம் அதன் இலக்குகளை அடைவதில் 2017 ஆம் ஆண்டில் கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது என்பதையும், அந்த ஆண்டில் பெறப்பட்ட அனுபவம் எதிர்கால நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதையும் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். எங்கள் நடவடிக்கைகள் முழுவதிலும் மகாவேலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் ஆதரவானது குறிப்பாக, சுற்றாடலைப் பாதுகாத்துக்கொண்டு கனிமத் துறையை வளர்த்தல் மற்றும் இலங்கையில் உள்ள அனைத்து உயிர்களையும் பாதுகாத்தல் எனும் அம்சங்களில் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

இலங்கையின் தேசிய அபிவிருத்திக்கான ஒரு முக்கிய பங்களிப்பாளராக அடையாளமிடுவதன் பொருட்டு இந்த வெற்றிகளை அடைவதில் மேற்கொண்ட

அர்ப்பணிப்புக்காக தலைவருக்கும், முகாமைத்துவ சபைக்கும் ஜி.எஸ்.எம்.பி. ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பணிப்பாளர் நாயகம்



## முகாமைத்துவக் குழு

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு என். போப்பகே |
| உறுப்பினர்கள் | : | திரு பீ. அல்கம<br>திருமதி ஜே.எம்.ஆர்.ஆர். ஜயசுந்தர<br>திரு ஏ.கே. பஸ்நாயக்க<br>திரு எஸ்.பீ. குமார<br>திரு மாபா பத்திரண |
| சபையின் செயலாளர்/சட்ட அலுவலர் | : | திருமதி எம்.எஸ்.கே. பெர்னாந்து |



## சிரேஸ்ட முகாமைத்துவம

| | | |
|---|---|---|
| தவிசாளர் | : | திரு என். போப்பகே |
| பணிப்பாளர் தலைமையதிபதி | : | பேராசிரியர் ரொஹான் பெர்னாந்து |
| பொது முகாமையாளர் | : | திரு எம்.டப்ளியு. ஜயமான்ன |
| பிரதிப் பணிப்பாளர் (புவிச்சரிதவியல்) | : | கலாநிதி சீ.எச்.ஈ.ஆர். சிறிவர்தன |
| பிரதிப் பணிப்பாளர் (கன்னுதல்) | : | பொறியியலாளர் சஜ்ஜன டி சில்வா |

# பணியகம் தொடர்பாக

## இலங்கையில் கனிப்பொருள் சார்ந்த கைத்தொழில் முன்னோடி

1992ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின் கீழ் சேவைகளை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் கனிம அபிவிருத்தி தொடர்பாக முன்னணி நிறுவனமாக விளங்குவதுடன், கனிமம் தொடர்பான கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக அரசின் பொறுப்புக்கள் இதன் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் இலங்கையில் கனிப்பொருள் அபிவிருத்திக்கான அதிகாரம் பெற்ற நிறுவனமாக காணப்படுவதோடு, இதுவரை இந்த நிறுவனம் மேற்கொண்ட அகழ்வுப் பணிகள் காரணமாக நாட்டுக்கு நன்மைகள் கிடைத்துள்ளன.

இலங்கை ஓர் சிறிய நாடு என்பதனால் அதன் பரப்புக்கீழ் கனிம வளங்களும் குறைவாகவே காணப்படுகின்றன. இதனால் பணியகம் கனிப்பொருள் சார்ந்த கைத்தொழில்களைஊக்குவிக்கும் அதேவேளை இவை புதுப்பிக்கத்தக்க ஒரு வளமாக இல்லாததால் விரயமின்றி பயன்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.


புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் நாட்டு மக்களுக்கு புவிச்சரிதவியல் இயல்தகவு தொடர்பான தகவல்களை வழங்கும் முன்னோடியாகச் செயற்படுவதோடு பூமியில் காணப்படும் வளங்கள் மற்றும் அதனுடன் தொடர்பான பிரச்சினைகள், சிக்கல்கள் தொடர்பான புரிந்துணர்வையும் ஏற்படுத்துகின்றது. பணியகமானது பல்வகையான அறிவியல் சார்ந்த நிபுணத்துவம் ஊடாக பல்வேறுபட்ட அகழ்வுகளுக்கான களத்தை ஏற்படுத்திக்கொடுப்பதுடன் வள முகாமையாளர்கள்,வழங்குனர்கள் மற்றும் ஏனைய பாவனையாளர்களுக்கும் புவிச்சரிதவியல் தேசப்படங்கள் உட்பட அறிவியல் தகவல்கள் அடங்கிய கைந்நூல்களையும் வழங்கிவருகிறது. புவி தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொண்டு புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ளுதல்,இயற்கை அனர்த்தங்களினால் உயிர்களுக்கும் சொத்துக்களுக்கும் ஏற்படும் பாதிப்புக்களை குறைத்துக் கொள்ளுதல் புவிச்சரிதவியல் சக்தி வலுவையும் கனிம வளங்களையும் முகாமைத்துவம் செய்தல் அத்துடன் எமக்குத் தேவையான தரமான பாதுகாப்பை மேம்படுத்தல் என்பவற்றுக்கான சேவைகளை புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் வழங்குகின்றது.

பணியகமானது பிரதானமாக நான்கு பணிகளை மேற்கொள்கின்றது. அவையாவன, புவிச்சரிதவியல் தேசப்படங்களை தயாரித்தல், கனிப்பொருள் அகழ்வு, கனிப்பொருட்களைத் தோண்டுவதற்கான உரிமைகள் மற்றும் தோண்டுவதற்கான ஒழுங்குவிதிகளைத் தயாரித்தல். (அடிப்படை பணிகள்) சேவைப்பயனர்களை இலக்காகக் கொண்ட பணிகள் (கனிப்பொருள் அகழ்வு, ஆய்வுக்கூடச்சேவைகள், புவி பௌதீக அகழ்வு தொடர்பான உடன்பாடுகள்) மற்றும் புவிச்சரிதவியல் சார்ந்த தகவல்களை வழங்குதல்.(வெளியிடப்பட்டுள்ள மற்றும் வெளியிடப்படாத அறிக்கைகளுக்கான அணுக்கம் மற்றும் நூலகத்தில் காணப்படும் தேசப்படங்களும் பிற ஆவணங்களும்)

அம்பாறை, அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, கொழும்பு, கம்பஹா, அம்பாந்தோட்டை, பாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, குருனாகல், மாத்தறை, மொனராகலை, பொலனறுவை, இரத்தினபுரி, திருகோணமலை ஆகிய நகரங்களில் 16 பிராந்திய அலுவலகங்களிலும் ஹசலக்க மற்றும் கந்தளாய் நகரில் இரண்டு உப அலுவலகங்களிலும் பணியகத்தின் கன்னுதல் பிரிவு இயங்கி வருகிறது.

உரிய பிரதேசங்களில் பல்வேறு அகழ்வுகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதும் சட்டவிரோத அகழ்வுப் பணிகளை கட்டுப்படுத்துவதும் இந்த பிராந்திய அலுவலகங்களின் முக்கிய பணியாக அமைந்துள்ளது.


புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் தனது சேவைகளை நாடு பூராகவும் விஸ்தரித்துள்ளது.


GSMB widen its service over the country
60000
160000
260000
450000
350000
250000
150000
N
W
E
S
Jaffna
Trincomalee
Anuradhapura
Kantale
Polonnaruwa
Batticaloa
Kurunegala
Ampara
Kandy
Gampaha
Badulla
Colombo
Monaragala
Ratnapura
Kalutara
Hambantota
Matara
25 12.5 0 25
Kilometers
Digital Cartography by Paditha Priyanga Maddumage (GSMB- Cartography Division)

# பணியகத்துடன் தொடர்புகொள்வதற்கான விபரங்கள்

| **எமது அலுவலகங்கள்** | **முகவரி** | **அலுவலகத் தலைவர்** | **தொலைபேசி / தொலைநகல்** |
|---|---|---|---|
| தலைமை அலுவலகம் | இல 569, எபிட்டமுல்ல வீதி, பிட்டகோட்டே. | பணிப்பாளர் தலைமை அதிபதி | +94-11-2886289<br>+94-11-2886290 |
| அம்பாறை | இல 669, புதிய நகர், அம்பாறை. | பொறியியலாளர் எம்.ஆர்.எம். பாரிஸ் | +94-63-2223385 |
| அனுராதபுரம் | இல 596/69, பண்டாரநாயக்க மாவத்தை அனுராதபுரம். | பொறியியலாளர் கே.என். டப்ளியு.கே. விமலரத்ன | +94-25-2224388 |
| பதுளை | இல 52/A, ரத்வத்த மாவத்தை, பதுளை. | பொறியியலாளர் டப்ளியு. கே.ஏ.எஸ். ரூப்பவங்ச | 055-2225210<br>+94-55-2222787 |
| மட்டக்களப்பு | இல 239, பார் வீதி, மட்டக்களப்பு | பொறியியலாளர் எச்.ஏ.சீ. கே.டப்ளியு பண்டார | +94-65-2222266 |
| கொழும்பு | இல 569, எபிட்டமுல்ல வீதி, பிட்டகோட்டே. | பொறியியலாளர் யூ.என். டிலந்தி | +94-11-2869478<br>+94-11-2869479 |
| அம்பாந்தோட்டை | இல 21, ரெரஸ் வீதி, அம்பாந்தோட்டை. | பொறியியலாளர் யூ.ரி.எச். பிரியந்த | +94-47-2222477 |
| கம்பஹா | இல 06, வெரலவத்த யக்கல. | பொறியியலாளர் சீ.பீ.லங்கா | +94-33-2231430 |
| யாழ்ப்பாணம் | இல 170, கொழும்புத்துறை வீதி யாழ்ப்பாணம. | பொறியியலாளர் சீ. கே. கருணாநந்த | +94-21-2224595 |
| களுத்துறை | இல 9 A, பள்ளிவாசல் வீதி, வெத்துமகட களுத்துறை - தெற்கு | கலாநிதி திலினி இளங்கே-ான் | +94-34-2225580 |
| கண்டி | இல 21, ஜனசவிகம, பல்லேகலை, கண்டி. | பொறியியலாளர் எஸ்.ஏ.ஜே.ஜே றொத்திரிகோ | +94-81-2421294<br>+94-81-2421474 |
| குருனாகல் | இல 15/B, நீர்கொழும்பு வீதி, மல்கடவெவ, குருனாகல். | பொறியியலாளர் பீ.டி.பிரசாத் | +94-37-2230858<br>+94-37-2232542 |
| மாத்தறை | இல 07, ஜயசூரிய மாவத்தை நூ ப்பே, மாத்தறை. | பொறியியலாளர் கே.வீ. ஜகத் | +94-41-2236765 |
| மொனராகலை | இல 190/6, வெல்யாய வீதி, மொனராகலை. | பொறியியலாளர் ரி.எம். டப்ளியு பண்டார | +94-055-2277392<br>+94-055-2276882 |
| இரத்தினபுரி | இல 66, சரணங்கர மாவத்தை, ஹிதல்லன, இரத்தினபுரி. | பொறியியலாளர் ஏ.எம்.எச்.வீ அதிகாரி | +94-45-2228117 |
| திருகோணமலை | பிரதேச செயலக அலுவலகம், 4ஆம் கட்டை கச்சேரி திருகோணமலை. | பொறியியலாளர் டி. மயூரன் | +94-26-3202411 |
| பொலனறுவை | பிரதேச செயலக அலுவலகம், புதிய நகர் பொலனறுவை. | திரு பீ.ஏ.எஸ். குமாரசிங்க | 027 - 2226366 |

# வரலாற்றுப் பின்னணி



1903ஆம் ஆண்டு கலாநிதி ஆனந்த குமாரசுவாமியின் தலைமையில் ,லங்கை கனிப்பொருள் அளவை நிறுவனம் (எம்.எஸ்.சீ) ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒரு நூற்றாண்டுக்கும் மேலாலக ,யங்கிவந்த புவியிரசாயன திணைக்களங்கள் பலவற்றின் பெருமைமிகு பதிலீட்டாளராக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தை அறிமுகப்படுத்தலாம்.நாட்டிலுள்ள கனிம வளங்களைக் கண்டறிதல்அவற்றை மேம்படுத்தல் அத்துடன் அவை சம்பந்தப்பட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் ,த்திணைக்களங்கள் வரலாற்று சாதனைகளைப் படைத்துள்ளன. அதேபோல்,தற்போது தொழிற்படும் கனிப்பொருள் சார்ந்த சகல கைத்தொழில்களும் ,த்திணைக்களங்களுக்கு கடமைப்பட்டுள்ளன.

1939,ல் கனிப்பொருள் அளவை நிறுவனமானது கனிப்பொருள் திணைக்களமாக அறியப்பட்டதோடு 1962,ல் அது புவிச்சரிதவியல் அளவைத் திணைக்களமாக பெயரிடப்பட்டது. மேலும்,1992ஆம் ஆண்டின் 33ஆம் ,லக்க சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின்படி 1993ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 18ஆம் திகதி பணியகம் தாபிக்கப்பட்டதுடன் அதன் மூலம் புவிச்சரிதவியல் அளவைப் பணிகளுடன் தற்போதுள்ள சுரங்கத் திணைக்களத்தின் பொறுப்புக்களும் ,ணைக்கப்பட்டன.

கனிப்பொருள் அபிவிருத்தி தொடர்பான முதன்மை நிறுவனமாக விளங்கும் பணியகம் நிறுவப்பட்டதன் மூலம் கனிப்பொருட்கள் சார்ந்த கைத்தொழில் மேம்படுத்தலில் அரசாங்கத்தின் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுதல் உறுதிப்படுத்தப்படுகிறது. அத்துடன் கூடிய விலைகொண்ட இறக்குமதிகளுக்கான பதிலீடுகளை வழங்குதல்,கட்டிடமற்றும் நிர்மாணத் துறைக்கான பொருட்களை வழங்குதல், ஏற்றுமதி கைத்தொழிலுக்கான மூலப்பொருட்களை வழங்குவதன் மூலம் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தல் மற்றும் நாட்டுக்கு வருவாயை ஈட்டித்தருவதிலும் கனிப்பொருட்கள் பயன்படுகின்றன. தேசிய புவிச்சரிதவியல் தரவு நிலையத்தைப் பேணுதல் மற்றும் தகவல்களை மக்களுக்கு வழங்குவதற்கான பொறுப்பினையும் இந்த நிறுவனம் ஏற்றுக்கொண்டுள்ளது.

# புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் எதிர்காலத் திட்டங்கள்

புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் ஆகிய பிரதான பிரிவுகளுடன் சம்பந்தப்பட்ட துறைகளில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பிரதான எதிர்காலத் திட்டங்கள்.

1. ப்ரைஸ்வோட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ் கம்பெனியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளின் அடிப்படையில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை மீளுருவாக்கம் செய்தல்.
2. நவீன எந்திரவியல் சார்ந்த புவிச்சரிதவியல் ஆய்வுக் கூடமொன்றை நிறுவுதல்.
3. கற் பாறையில் ஆய்வுக்கூடத்தை தரமுயர்த்துதல்.
4. பகுப்பாய்வு ஆய்வுக்கூடத்தின் நடவடிக்கைகளை தரமுயர்த்துதல்.
5. நவீன புவிச்சரிதவியல் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.
6. துளை கருவிகளுக்கான களஞ்சியசாலை வசதிகளை ஏற்படுத்துதல்.
7. பொறியியல் திட்டவமைப்பு அளவுகளை உருவாக்குதல்.
8. சுரங்கம் தோண்டுதல் மற்றும் மீட்டளிப்பு நடவடிக்கைகளை விருத்தி செய்தல்.
9. சுற்றாடல் தாக்க மதிப்பீடு/ பூர்வாங்க சுற்றாடல் ஆய்வு சார்ந்த பணிகளை மேம்படுத்துதல்.
10. சந்தைப் பெறுமதி தொடர்பான மதிப்பாய்வு
11. புதிய பிராந்திய அலுவலகங்களை அமைத்தல்
12. பிராந்திய அலுவலகங்கள் அமைப்பதற்கான காணி சுவீகரிப்பு
13. TPL நுண்ணாய்வு கட்டமைப்பை அறிமுகம் செய்தல்
14. நிலத்தை ஊடுருவிச் செல்லும் ரேடார் கட்டமைப்பை அறிமுகம் செய்தல்
15. 5s மற்றும் ISO தர நியமங்களை பெற்றுக் கொள்வதன் மூலம் செயற்பாடுகளை தரப்படுத்தல்.
16. நான்காம்நிலை அமைப்பு படமாக்கல்
17. மண்புவியிரசாயன படமாக்கல்
18. ஆண்டறிக்கைகளை வெளியிடுதல்
19. ஆற்று படுக்கைகளின் அடையல்களை சோதனையிடல்
20. அணு சார்ந்த மூலப்பொருட்களை பரிசோதனை செய்தல்
21. நில நடுக்க அளவீடு
22. பெருநகரப் பிரதேசங்களில் பரப்புக்கீழ் அடுக்குகளில் மண் - புவிப் பொறியியல் பண்புகள், எப்பாவல பொசுப்பேற்று படிவு பரவியிருக்கத்தக்க பிரதேசங்கள் தொடர்பான புவிப் பௌதீக ஆய்வு

# பிரிவு ரீதியான செயலாற்றுகை

## புவிச்சரிதவியல் பிரிவு

## புவிச்சரிதவியல் பிரிவின் முன்னேற்ற அறிக்கை

புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் 2017ஆம் ஆண்டில் மிகவும் முக்கியமான காலத்தின் தேவையாக காணப்பட்ட கனிம மூலப்பொருள் நுண்ணாய்வுக்கு முன்னுரிமை வழங்கி செயல்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித் திட்டம் 2017ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது. நாடு முழுவதிலும் மேற்கொள்ளப்பட்ட இந்த நுண்ணாய்வு பணிகளுக்காக தொழில்நுட்ப பதவி அணியைச் சேர்ந்த அதிகமானோரை ஈடுபடுத்த வேண்டிய நிலை ஏற்பட்டதால் செயற்பாட்டு திட்டத்தில் 2017ஆம் ஆண்டு ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த நடவடிக்கைகளில் அனேகமானவை 2018ஆம் ஆண்டு வரை பிற்போடப்பட்டன.

## நிர்மாண மூலப்பொருள் நுண்ணாய்வு

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் துரித அபிவிருத்தி கருத்திட்டங்களுக்காக நிலவுகின்ற அதிகூடிய நிர்மாண மூலப்பொருள் கேள்வியை பூர்த்தி செய்வதற்காகவும், அதன் பொருட்டு எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் புவிச்சரிதவியல் பிரிவு 2017ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதத்தின் பிற்பகுதியிலிருந்து தர மற்றும் அளவு ரீதியான மூலப்பொருள் நுண்ணாய்வு பணியை ஆரம்பித்தது. தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் வேண்டுகோளின் பெயரில் அந்த திணைக்களத்தினால் அளிக்கப்பட்ட 60 மில்லியன் ரூபா நிதிப் பங்களிப்புடன் இந்த நுண்ணாய்வு ஆரம்பிக்கப்பட்டது.

நாடு பூராகவும் தர மற்றும் அளவு ரீதியாக உலோகங்கள்.்பாறைகள், சரளைக் கற்கள், மண் மற்றும் மணல் அகழ்வுகளை மேற்கொள்ளக் கூடிய பொருத்தமான இடங்களை இனங்காணல் இந்த நூண்ணாய்வின் நோக்கமாகும். இதனூடாக மக்களின் வாழிடங்கள், நீர்த் தோற்றுவாய்கள் சுற்றாடல் ரீதியாக கவனம் பெறுகின்ற இடங்கள் மற்றும் மண்சரிவு ஏற்படக் கூடிய இயல்தகவு போன்ற விடயங்கள் தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்தப்பட்டு சுரங்கம் தோண்டும் நடவடிக்கைக்கு பொருத்தமான இடங்கள் பற்றிய விதப்புரைகளும் வழங்கப்படும். மேலும்,கண்டி அதிவேக நெடுஞ்சாலை, தெற்கு அதிவேக நெடுஞ்சாலயின் மாத்தறையிலிருந்து நீட்டிக்கப்படவுள்ள பகுதி, நீர்கொழும்பு வரை நீட்டிக்கப்படவுள்ள அதிவேக நெடுஞ்சாலை மற்றும் மாநகர அமைச்சினால் கொழும்பு நகரில் மேற்கொள்ளப்படும் நிர்மாணப் பணிகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

## நுண்ணாய்வின் முன்னேற்றம்

| | மாவட்டம் | 2017 ஆண்டில் முன்னேற்றம் |
|---|---|---|
| 1 | கொழும்பு | களப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. |
| 2 | திருகோணமலை | களப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. |
| 3 | களுத்துறை | களப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. |
| 4 | கேகாலை | களப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. |
| 5 | மொனறாகலை | களப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. |
| 6 | அனுராதபுரம் | களப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. |
| 7 | புத்தளம் | களப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. |
| 8 | மாத்தறை | களப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. |
| 9 | ஆம்பாந்தோட்டை | களப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. |
| 10 | குருனாகல் | களப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. |
| 11 | கம்பஹா | களப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. |
| 12 | காலி | ஆண்டின் இறுதியில் களப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |

## நான்காம்நிலை படமாக்கல் கரையோர வலய நிகழ்ச்சித்திட்டம்

புவியியல் சார்ந்த கால அடுக்குகளின் நான்காம்நிலை காலப்பகுதி இற்றைக்கு சுமார் 02 மில்லியன் ஆண்டுகால வரலாறு வரை நீண்டு செல்கிறது. இலங்கையின் நான்காம்நிலை அமைப்பு கரையோர அடையல்ங்கள், வண்டல் அடையல்ங்கள் மற்றும் பாறைகளின் அமைப்புக்கு வரையறுக்கப்பட்டதாக காணப்படுகின்றது. இந்த அமைப்பில் பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் பெறுகின்றன களிமண், வண்டல் படிவுகள், பவளப்பாறைகள், செழிப்பான மண் போர்வை மற்றும் நிலக்கீழ் நீர் என்பன அடங்குவதால் இவை மிகுந்த சிறப்பினைப் பெறுகின்றன. புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் 2008ஆம் ஆண்டில் நான்காம்நிலை புவியியல் சார்ந்த படமாக்கல் என்ற பெயரில் கருத்திட்டம் ஒன்றை ஆரம்பித்தது.

## நான்காம்நிலை படமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் அலுவலக ரீதியான பணிகள்

புத்தளம் மற்றும் சிலாபத்துறை வலயங்களின் படமாக்கல் பணிகளில் 90% நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. கற்பிட்டி, அம்பாந்தோட்டை, தங்காலை மற்றும் திஸ்ஸமகாராம வலயங்களில் தரவுகளை சேகரிக்கும் பணி பெரும்பாலும் நிறைவு கண்டுள்ளது.

## புத்தளம் மற்றும் கற்பிட்டி பகுதியில் விரிவான துளையிடும் பணி


இந்த இரண்டு இடயங்களிலும் விரிவான துளையிடும் பணிகள் நிறைவடைந்துள்ளன. புத்தளத்தை அண்டிய அந்தாவில்லுவ, சிரம்பியாதிய மற்றும் வனாத்தவில்லுவ போன்ற பிரதேசங்களில் மூன்று துளைகள் இடப்பட்டுள்ளன. துளையின் ஆழம் அதிகமாக இருந்த காரணத்தினால் உரிய காலப்பகுதியில் ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு திட்டமிடப்பட்ட ஏனைய 02 துளைகளையும் உரிய இடங்களில் இட முடியவில்லை. அதன்படி துணையிடும் பணிகளை ஆண்டு நிகழ்ச்சித் திட்டத்துடன் முன்னெடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## மண் புவியிரசாயன படமாக்கல் நிகழ்ச்சித்திட்டம்

மண்ணின் புவியிரசாயன பண்புகளை ஆய்வு செய்வதற்காக 2008ஆம் ஆண்டில் மண் புவியிரசாயன நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கனிப்பொருள் அகழ்வு, சுற்றாடல் ஆய்வு மற்றும் விவசாய ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காகவும்,உடனலத் தீங்குகளை ஆராய்வதற்காகவும் இந்த தேசப்படங்கள் பயனுள்ளதாக அமையும். 1:50,000 அளவுத்திட்டதேசப்படங்களை பயன்படுத்தி புவியிரசாயன படமாக்கல் மேற்கொள்ளப்படுகின்றது. ஒவ்வொரு 04 சதுர கிலோ மீற்றர் பரப்பு கொண்ட பிரதேசத்தின் 01 சதுர கிலோமீற்றர் பரப்பின் மேற்பரப்பிலும் 02 மீற்றர் ஆழத்திலும் இரண்டு மண் மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்படும். அணு உறிஞ்சல் நிறமாலைக் காட்டி மற்றும் குருதி முதலுருவுடன் தூண்டியிணைக்கப்பட்ட ஒளிவீச்சற் நிறமாலைக் காட்டி (ICP-OES)யைப் பயன்படுத்தி இந்த மாதிரிகளின் இரசாயன பண்புகள் பகுப்பாய்வு செய்யப்படும்.

## மண் புவியிரசாயன படமாக்கல் மற்றும் அச்சிடல் நிகழ்ச்சித்திட்டம

திம்பொல்கெட்டிய, மாத்தறை, றக்வான, தங்காலை, மொறவக்க மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய ஆறு வலயங்களில் 1:50,000 அளவு திட்டத்தை பயன்படுத்தி (றக்வான - கவலான) 20 ஆம் இலக்க வலயத்தின் புவியிரசாயன தேசப்படங்களை அச்சிடும் பணி பூர்த்தி செய்யப்பட்டுஅவை இன்றளவில் விற்பனைக்காக சந்தைக்கு அனுப்பப்பட்டுள்ளன.




## மண் புவியிரசாயன படமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் ஆய்வுக்கூட பணிகள்.

வலய இலக்கம் 08 (அனுராதபுரம் - பொலனறுவை) வலய இலக்கம் 08இன் பகுப்பாய்வு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன

## மண் புவியிரசாயன படமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் களப் பணிகள்.

கெக்கிராவ (1:50,000 அளவுத்திட்டம்) வலயத்தின் களப்பணிகள் 2011ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, வவுனியா வலயத்தின் களப்பணிகள் 2017ஆம் ஆண்டின் இரண்டாவது கால-ாண்டில் ஆரம்பிக்கப்பட்டு இன்றளவிலும் நடைமுறையில் உள்ளது

## வருடாந்த கனிம நூல் 2015 மற்றும் 2016

2015ஆம் ஆண்டின் கனிம நூல் இந்த ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளதோடு 2016ஆம் ஆண்டின் கனிம நூலுக்க-ான தரவுகளை சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்யும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன

## சுனாமி எச்சரிக்கை நிலையம் மற்றும் மூன்று நில அதிர்வு கண்காணிப்பு நிலையங்கள்

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தால் ஒரு சில தடைகள் காணப்பட்ட போதும் உதவி வழங்கும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து அமைக்கப்பட்டுள்ள 03 நில அதிர்வு கண்காணிப்பு நிலையங்கள் பல்லேகலை (பல்க்) ஹக்மன (ஹல்க்) மற்றும் மஹகந்தராவ (மல்க்) ஆகிய பிரதேசத்தில் மிகவும் சிறப்பான முறையில் இயங்கி வருகின்றன. இந்த நிலையங்களினால் வழங்கப்படும் தரவுகள் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் பிரதான அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள தரவு நிலையத்திற்கு ஊடுகடத்தப்படும். 2017ஆம் ஆண்டில் இந்த நிலையங்களிலிருந்து வெற்றிகரமாக தரவுகள் பெறப்பட்டுள்ளன. நிலநடுக்கம், நில அதிர்வு மற்றும் இந்து சமுத்திரத்தில் ஏற்படும் நில அதிர்வுகள் தொடர்பில் பொது மக்களால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு இந்த தரவு நிலையம் வெற்றிகரமான முறையில் பிரதிபலிப்பு செய்துள்ளது.

GFZ நில அதிர்வு கண்காணிப்பு மையம் (மலக் மற்றும் ஹல்க்) ஆகிய இரண்டு நில அதிர்வு கண்காணிப்பு நிலையங்களில் ஏற்பட்டிருந்த தொடர்பாடல் பிரச்சினைகளை தீர்க்கும் பணியில் இணைந்து கொண்டது. 2017ஆம் ஆண்டில் செய்மதியின் தொடர்பாடல்களில் கோளாறு ஏற்பட்டது.GFZ நிலையத்திற்கு முன்னறிவித்தல் ஏதுமின்றி

2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08 திகதி செய்மதி சேவை வழங்குனரான ரெலிகொமியெல் நிறுவனம் ரெலிகொம் 02 செய்மதிலிருந்து ரெலிகொம் 03 செய்மதிக்கு மாறியதன் காரணமாக இந்த சிக்கல் ஏற்பட்டது. இந்த புதிய செய்மதி இலங்கையின் நிலப்பரப்பை உள்ளடக்கவில்லையென்பதை அதன் அடிச்சுவடுகளில் காணலாம். இந்த பிரச்சினைக்கு தற்காலிகத் தீர்வாக இந்த இரண்டு நிலையங்களிலும் நடமாடும் தொடர்பு மொபிரெல் நிறுவப்பட்டது. அதன்படி, தற்போது மொபிரெல் தொடர்பால் மூலம் தரவுகள் ஊடுகடத்தப்படுகின்றன. GFZ நிறுவனம் செய்மதி தொடர்பாடலை புதிய செய்மதிக்கு மாற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதற்காக தற்பொழுது காணப்படுகின்ற வானலை வாங்கிகளை நீக்கி புதிய வானலை வாங்கிகளை பொருத்த வேண்டும் என்பதுடன் அதற்கான செலவினை GFZ நிறுவனம் எடுக்க உள்ளது.

இந்த நில அதிர்வு தரவுகள் மற்றும் சுனாமி எச்சரிக்கை நிலையம் நில அதிர்வுகளை கண்காணிக்கும் பணிக்கு மேலதிகமாக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகதுடன் தொடர்புடையதாக பொதுமக்களிடமிருந்து கன்னுதல் தொடர்பாக கிடைக்கின்ற முறைப்பாடுகளையும் பெற்றுக் கொள்கிறது. இந்த ஆண்டில் துரித அழைப்பு தொலைபேசி இலக்கம் 1921 அறிமுகப்படுத்தப்பட்டது, தரவு நிலையத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் இவ்வாறு கிடைக்கப்பெறும் முறைப் பாடுகளை ஏற்றுக்கொண்டு அவற்றை கன்னுதல் பிரிவுக்கு ஆற்றுப்படுத்துகின்றனர்.

## புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் நூலகம்

**2015ஆம் ஆண்டுக்கான பாடநூல் கொள்வனவு** - 2017ஆம் ஆண்டில் பாடநூல்களை கொள்வனவு செய்வதற்காக 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. தேவையான பாடநூல் பட்டியல் தயாரிப்புப் பணி பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, 2018ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பாட நூல்கள் கொள்வனவு செய்யப்படும்.

**அரும்பொருட்காட்சியக அபிவிருத்தி** - புதிதாக வழங்கப்பட்ட அரும்பொருட்காட்சியக பொருட்களை காட்சிப்படுத்துவதற்கான அலுமாரிகள் மற்றும் காட்சிப்படுத்தல் நிலை அடுக்குகளை கொள்வனவு செய்வதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அரும்பொருட்காட்சியக அபிவிருத்திக்குழுவின் உறுப்பினர்கள் தேசிய அரும்பொருட்காட்சியகத்திற்குச் சென்று காட்சிப்படுத்தல் அலுமாரிகளை அமைக்கும் முறை மற்றும் அவற்றுக்கான ஒளியூட்டல் கட்டமைப்பை நிர்மாணிக்கும் விதம் பற்றிய அவசியமான தகவல்களையும் ஆலோசனைகளையும்பெற்றுள்ளனர்.

**சஞ்சிகைகளைப் பிணைத்தல்** - புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் காலத்தால் பிந்திய சஞ்சிகைகள் 460 தொகுதிகளாக பிணைக்கப்பட்டுள்ளன.

**நூலக எண்படுத்தல் கருத்திட்டம்** - புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் 2017ஆம் ஆண்டு மே மாதம் நூலக எண்படுத்தல் கருத்திட்டத்தின் மூன்றாம் கட்ட பணிகளை ஆரம்பித்தது. இப்பணிகளில் முதலாவதாக சஞ்சிகைகள்(சஞ்சிகைகளின் வகை, தொழில்நுட்ப அறிக்கைகள், ஏனைய அறிக்கைகள் மற்றும் பத்திரிகைகளிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட பகுதிகள்) தெரிவு செய்யப்பட்டன. 50,000 பக்கங்களை அடையாளம் காண்பதற்கான அடையாள ஒட்டு முறைமை உருவாக்கப்பட்டது. இப்பணி தொடர்ச்சியாக நடைபெற்று வருவதுடன் இந்த ஆவணங்களில் ஒரு பகுதி துழாவல் செய்து D வெளியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

**புதிய நூலக மென்பொருள் (கொஹா) 2017** - புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் 2010ஆம் ஆண்டு தொடக்கம் மாலபேவில் அமைந்துள்ள இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட"தானியங்கி தொடரறா நூலக கட்டமை"ப்பை நூலக மென்பொருளாக பயன்படுத்தி வருகிறது. இது ஒரு வணிக மென்பொருளாக (மென்பொருளின் விலைரூபாய் 8,000,000/-) காணப்படுவதோடு அதனுடைய வருடாந்த பராமரிப்புச் செலவு ரூபா 84,000/-. எவ்வாறாயினும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஷதானியங்கி தொடரறா நூலக கட்டமை-ப்பாக அறியப்படும் இந்த வணிக மென்பொருளை நவீன மயப்படுத்துவதற்கு சந்தரப்பம் வழங்கப்படவில்லையென்பதால் அதனை மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை வழங்குவதற்காக மட்டும் பயன்படுத்தலாம்.

மேலும், உலகத்தில் காணப்படும் பல்வேறு பல்கலைக்கழகங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் மிகவும் பிரபலமானதாக"கொஹா" என அறியப்படுகின்ற ஒருங்கிணைக்கப்பட்ட திறந்த ஆதாரமூலமான இந்த மென்பொருள் இலங்கையிலும் பாவனைக்கு உகந்தது என்பதை பரிந்துரை செய்கின்றோம். இந்த மென்பொருள் சர்வதேச நூலக சட்ட விதிகளுக்கு அமைவானது.(Z39.50, MARC, UNIMARC). இந்த ஆண்டில் "கொஹா" மென்பொருளை கொள்வனவு செய்யுமாறு நூலகத்திற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது

## புவிப் பௌதீக நுண்ணாய்வு

| | கருத்திட்டம் | விபரம் | நிலை |
|---|---|---|---|
| 01 | திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் பிரதேசத்தில் நிலக்கீழ் நீரை சோதித்தல் | நிலக்கீழ் நீரை பெற்றுக்கொள்ள முடியுமான 20இற்கும் மேற்பட்ட இடங்கள் இனங்காணப்பட்டுள்ளதோடு மணல் அகழ்வு, நிலக்கீழ் நீர் வட்டம் மற்றும் கந்தளாய் நீர்ப்பாசன நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஏற்படக்கூடிய தாக்கம் பற்றி ஆய்வு செய்யப்பட்டது. | 2017 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் பணிப்பாளர் சபைக்கு அறிக்கை வழங்கி வைக்கப்பட்டு 2017 ஏப்ரல் மாதத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. |
| 02 | படிகக்கல் படிவுகளை சோதனையிடல் | கயிக்காவல தோட்டத்தில் படிகக்கல் படிவுகளின் பரப்புக்கீழ்ப் பகுதியின் விஸ்தரிப்பினை மதிப்பீடு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்புத் திறன் அளவை. | அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 03 | எப்பாவல / கிரிவில அபரயிட் ஆய்வு | இரண்டு இடங்களில் அபரயிட் படிவுகளின் அளவு மற்றும் காந்தப்புல குறியீடுகள் தொடர்பான புவிப் பெதீக ஆய்வு | பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு இடைக்கால அறிக்கையை சமர்ப்பிக்க முடியும். |
| 04 | செயற்படாதுள்ள நிலநடுக்க கண்காணிப்பு நிலையங்கள் | இலங்கைக்கு தெற்காக இந்து சமுத்திரத்தில் மேற்கொள்ளப்பட்ட சமுத்திர ஆய்வுக்கு சமாந்தரமாக ஊடாக செயற்படாதுள்ள 14 நிலநடுக்க கண்காணிப்பு நிலையங்களை இயங்க வைத்தல், சாதனங்களை பொருத்துதல் மற்றும் பாலைப் பெற்றுக் கொள்ளுதல். | GFZ ஒத்துழைப்புடன் நிறுவுகைப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் |
| 05 | டொலரைற்றுப் பாறை (அணைநீர் நெரிசி-வர்)களின் ஆயுளைத் தீர்மானித்தல் | டொலரையிற்றுப் பாறைகள் தொடர்பில் தொடர்ச்சியாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. அவற்றின் ஆயுள் காலத்தை தீர்மானிப்பதற்காக 14 மாதிரிகள் நெதர்லாந்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இலவசம்) | இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முழுமைப்படுத்தப்பட்ட அறிக்கை (பத்திரம்) பெறுபேறுகள் கிடைத்த பின்னர் வெளியிடப்படும் |
| 06 | கனிமக் கொள்கை | கட்டமைப்பில் தற்போது காணப்படும் பின்னடைவுக்கு தீர்வு தேடுமுகமாகத் கனிம கொள்கையொன்றைத் தயாரித்-தல். | அறிவியல் ரீதியான மற்றும் தொழில்நுட்ப ஆக்கக்கூறுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |

## கற்பாறைவியல் ஆய்வுக் கூடம்

1. தனியார் சேவைப் பயனர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் மூலம் கிடைத்த நேரடி வருமானம்

| மாதிரிகளின் எண்ணிக்கை | வருமானம் (ரூபா) |
|---|---|
| 330 | 1,756,000.00 |

2. புவிச்சரிதவியல் பிரிவு கருத்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மாதிரி பரிசோதனைகள் மூலம் கிடைத்த வருமானம்

**புவிச்சரிதவியல் பிரிவின் கருத்திட்ட வருமானம் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

| கருத்திட்டத்தின் பெயர் | மாதிரிகளின் எண்ணிக்கை | வருமானம் (ரூபா) |
|---|---|---|
| வரை. எம்.ஜீ.எம். மயின்ஸ் அன்ட் மினரல்ஸ் பிரைவெட் லிமிரெட் | 50 | 225,000.00 |

3. புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் அலுவலர்களது வேண்டுகோளின் பேரில் கருத்திட்டங்கள் மற்றும் கள நடவடிக்கைகளின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட ஏனைய பகுப்பாய்வுகள்

| பகுப்பாய்வுக்கான கோரிக்கை | மாதிரிகளின் தன்மை | மாதிரிகளின் எண்ணிக்கை | பகுப்பாய்வுப் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|
| சமிந்தி விஜேரத்ன | மணல் | 10 | 45,000.00 |
| தாராநாத். (அதிகாரமளிப்பு கலாநிதி. சீ.எச்.ஈ.ஆர் சிறிவர்தன) | பாறை | 12 | 42,000.00 |
| இலங்கைச் சுங்கம் | மணல் | 3 | 35,000.00 |
| நீதவான் மன்றம் | மணல் | 21 | 94,500.00 |
| மொத்தம் | | | 216,500.00 |

## பகுப்பாய்வு ஆய்வுக் கூடம்

**பகுப்பாய்வு ஆய்வுக்கூடம் வெளி சேவை பயனர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரசாயன பகுப்பாய்வுகள் -**

பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நபர்களின் வேண்டுகோளின் பேரில் சுண்ணாம்புக்கல், படிகக்கல், காரீயம், களிக்கல், மண், மணல், சீமெந்து, மைக்கா, கனிய மணல், களிமண், நீர், சிதைவடைந்த பாறைகள், மற்றும் ஏனைய உலோகக் கலவைகள் அத்துடன் தரை ஓடுகள் மற்றும் வனைபொருள் கலவைகள் அடங்கிய 244 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இதன் மூலம் ரூபா 1,682,000.00 (வரியல்லாத) தொகை பகுப்பாய்வு ஆய்வுக்கூடத்திற்கு வருமானமாக கிடைத்தது

புவிச்சரிதவியல் பிரிவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்திட்டங்களின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வுகள்.

**புவிச்சரிதவியல் பிரிவின் கருத்திட்ட வருமானம் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

| கருத்திட்டத்தின் பெயர் | மாதிரிகளின் எண்ணிக்கை | வருமானம் (ரூபா) |
|---|---|---|
| 1. டோக்கியோ சிமென்ட் லயிம்ஸ்டோன் கருத்-திட்டம் | 83 | 581,000.00 |
| 2. வரை. எம்.ஜீ.எம். மயின்ஸ் அன்ட் மினரல்ஸ் பிரைவெட் லிமிரெட் | 50 | 300,000.00 |
| 3. டோக்கியோ சிமென்ட் கருத்திட்டம் /நீர் | 08 | 72,000.00 |
| 4. வரை. டோக்கியோ சிமென்ட் லங்கா தனியார் கம்பனிக்காக மேற்கொள்ளப்பட்ட சீமெந்து மூலப்பொருள் அளவை | 110 | 1,320,000.00 |
| மொத்தம் | | 2,273,000.00 |

## புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் வேண்டுகோளின் பேரில் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வுகள்

| பகுப்பாய்வுக்கான கோரிக்கை நபர் / கருத்திட்டம் | மாதிரிகளின் எண்ணிக்கை / தன்மை | பகுப்பாய்வு வகை | பகுப்பாய்வின் பெறுமதி |
|---|---|---|---|
| 1. திரு ஏ. எஸ். ஜயகொடி புவிச்சரிதவியலாளர், சுகாதாரத் திணைக்களம் | நீர் - 01 | பருகுவதற்கு உகந்ததா என்பதை ஆராய 16 பரமானங்கள் | ரூபா. 9000.00 |
| 2. கலாநிதி ஓ. கே. திசாநாயக்க | பாறை 01 | பூரண பகுப்பாய்வு | சுள 12,000.00 |
| 3. திரு நலின் டி சில்வா, புவிச்சரிதவியலாளர் / மொறவெவ, திருகோணமலை நீர்ப் பரிசோதகர் | நீர் - 11 | பருகுவதற்கு உகந்ததா என்பதை ஆராய 16 பரமானங்கள் | சுள 99,000.00 |
| 4. கலாநிதி டப்ளியு. ஐ. எஸ். பெர்னாந்து | களி - 01 | identification | சுள 12,000.00 |
| 5. திருமதி சமிந்த விஜேரத்ன புவிச்சரிதவியலாளர், பொல்கொட மணல் ஆராய்ச்சியாளர் | மணல் - 04 | ஈயம், கட்மியம், ஆசனிக், பாதரசம | சுள 9000.00 |

## ஒழுங்குபடுத்தலுக்காக இலவசமாக பரிசோதனை செய்யப்பட்ட மாதிரிகள்

| பகுப்பாய்வுக்கான கோரிக்கை நபர் / கருத்திட்டம் | மாதிரிகளின் எண்ணிக்கை / தன்மை | பகுப்பாய்வு வகை | பகுப்பாய்வின் பெறுமதி |
|---|---|---|---|
| 1. கற்பாறைவியல் ஆய்வுக்கூடம் / நீதிமன்ற மாதிரிகள் | மணில் (10) | உவர்த்தன்மை | ரூபா. 10,000.00 |
| 2. இலங்கைச் சுங்கம் | மண் (05) | தங்கத்திற்காக | ரூபா. 10,000.00 |

## செயற்பாட்டுத் திட்டம் - புவியிரசாயன படமாக்கல்

**வலய இலக்கம் 20 : றக்வானை - தங்காலை -** தீம்பொல்கெட்டிய, மாத்தறை, றக்வானை, தங்காலை, மொறவக்க மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய வலயங்களில் 1:50,000 அளவு திட்டத்தின் பகுப்பாய்வுத் தரவுகளைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட வலய இலக்கம் 20 (றக்வான - தங்காலை) தேசப் படத்தை அச்சிடும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதோடு அது விற்பனைக்காக சந்தைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**வலய இலக்கம் 08 : அனுராதபுரம் - பொலனறுவை -** புவியிரசாயண வலைய இலக்கம் 08 (அனுராதபுரம் -பொலனறுவை தேசப்படத்தை தயாரிப்பதற்காக கெக்கிராவ வலயத்தில் சேகரிக்கப்பட்ட 250 மாதிரிகளின் பகுப்பாய்வுப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

**வலய இலக்கம் 6 : வவுனியா -** திருகோணமலை - புவியிரசாயண வலைய இலக்கம் 06 1:50,000 அளவுத் திட்டத்தின் தேசப்படத்தை தயாரிப்பதற்காக மதவாச்சி மற்றும் ஹொரவபத்தானை வலயத்தில் சேகரிக்கப்பட்ட 500 மாதிரிகளின் பகுப்பாய்வுப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

**ஆய்வுக்கூட ஏற்றங்கீகாரம் - ISO 17025 -** ஆய்வுக்கூடங்களுக்கான ஏற்றங்கீகார முறைமைக்கு (ISO - 17025) விண்ணப்பிப்பதற்கு தேவையான தரக்கட்டுப்பாட்டு கைந்நூல், நடவடிக்கைமுறை கைந்நூல், வழிமுறைக் கைந்நூல் செயல் ஒழுங்கு கைந்நூல் மற்றும் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

# சேவைப்பயனர்களின் வேண்டுகோளின்படி நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களால் ஈட்டப்பட்ட வருமானம்

| கருத்திட்டத்தின் பெயர | காலம் | | சேவைப் பயனர் (கம்பனி) | 2017 ஆண்டின் இறுதியில் நிலை |
|---|---|---|---|---|
| | தொடக்கம் | வரை | | |
| யாழ்ப்பாணம் - கிளிநொச்சி CMEC | 7/31/2017 | 8/5/2017 | CMEC - BPPE JV | நிறைவுற்றது |
| கண்ணாடி மணல் அளவை வள்ளிபுரம் | 5/15/2017<br>5/15/2017<br>5/15/2017 | 7/28/2017<br>7/14/2017<br>7/28/2017 | வரை. எம். ஜீ. எம் மினரல்ஸ் தனியார் | நிறைவுற்றது |
| பாத்தகட துளையிடு கருத்திட்டம் | 3/9/2017 | 7/31/2017 | வரை. லங்கன் ரிசோசஸ் தனியார் | நிறைவுற்றது |
| மீரிகம அதிவேக நெடுஞ்சாலை துளையிடு கருத்திட்டம் | 1/2/2017<br>1/3/2017 | 1/31/2017<br>2/2/2017 | வரை. நீட் சொலியுசன் தனியார் | நிறைவுற்றது |
| பூனகரி வள்ளிபாடு கருத்திட்டம் - 2016 | 9/5/2017<br>4/1/2017 | 10/29/2017<br>10/30/2017 | டோக்கியோ சிமென்ட் | நிறைவுற்றது |
| தெனியாய கருத்திட்டம் | 6/15/2017 | 7/19/2017 | சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு | நிறைவுற்றது |
| தொடங்கஸ்லந்த துளையிடு கருத்திட்டம் | 9/1/2017 | தொடர்கிறது | ஆர். எஸ். மயின்ஸ் தனியார் | தொடர்கிறது |
| தொளுவ துளையிடு கருத்திட்டம் | 8/21/2017 | 8/27/2017 | | நிறைவுற்றது |

# சுரங்கப் பிரவு

## சுரங்கப் பிரிவின் பிரதான பணிகள்

சமகாலத்தில் பதினேழு பிராந்திய அலுவலகங்களில் சுரங்கப் பிரிவு செயற்படுகின்றது. சுரங்கத் த'ழிற்துறையில் ஈடுபட்டுள்ள எமது சேவைப் பயனர்களுக்கு அவசியமான சேவைகளை வழங்குவதற்காக இந்த அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1992ஆம் ஆண்டில் 33ஆம் இலக்க சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்திற்கு சமீபத்தில் கொண்டுவரப்பட்ட திருத்தத்தினால் பணியகத்திற்கு சட்டவிரோதமான சுரங்கம் தோண்டும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கான அதிகளவான அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. ஸ்தல ஆய்வுகளை மேற்கொள்ளுதல், பரிசோதனை வெடி வைப்புகளை மேற்கொள்ளுதல், பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரணை செய்தல், கனிப்பொருட்களை தோண்டுதல், வியாபாரம் செய்தல், கனிப்பொருட்களை அகழ்ந்தெடுத்தல் மற்றும் இடம்பெயர்தல் போன்ற நடவடிக்கைகளுக்கான உரிமங்களை வழங்குதல் அத்துடன் சட்ட விரோதமாக மேற்கொள்ளப்படும் சுரங்கம் தோண்டும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தல் என்பன இப் பிரிவின் முக்கிய பணிகளாகும்.

1992ஆம் ஆண்டில் 33ஆம் இலக்க சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின்படி பதனிடுதல் மற்றும் ஏற்றுமதி செய்வதற்காக சுரங்கங்கள் தோண்டப்படுவதன் வர்த்தக ரீதியான சாத்தியவள மதிப்பீட்டையும் இந்த பிரிவு மேற்கொள்கிறது.

உரிமங்களை வழங்குவதன் மூலம் கனிப்பொருட்களை தோண்டி எடுத்தல், அகழ்ந்தெடுத்தல் மற்றும் அவற்றை பதனிடுதல், வியாபாரம் செய்தல், ஏற்றுமதி செய்தல் போன்ற நடவடிக்கைகளும் இப்பிரிவின் பணிகளில் அடங்குகின்றன.

மேலும், வர்த்தக நோக்கத்திற்காக கனிப்பொருட்களை பிரித்தெடுத்தல், உற்பத்தி செய்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக பின்பற்றவேண்டிய நடவடிக்கைமுறை தொடர்பாக அமைச்சுக்கு ஆலோசனை வழங்கும் பணியும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## வழங்கப்படும் சேவைகள்

**சுரங்கங்களை சோதனையிடல்** (நடமாடும் சேவை - உரிமங்களை வழங்குதல், தொழினுட்பச் சேவைகள்)

**நிபுணத்துவ சேவைகள்** (வெடி வைத்தல், கைவினைஞர் சார் நுட்பங்கள், உரிமங்களைப் புதுப்பித்தல், பாதுகாப்பு வழிமுறைகள், பரிசோதனை வெடி வைத்தல், வெடிப்புகளை ஆராய்தல்)

**விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்** (அரசாங்க அலுவலர்கள் மற்றும் உரிமம் பெற்றவர்களுக்காக நடத்தப்படும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள், சுரங்கம் தோண்டும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான செயலமர்வுகள், கண்காட்சிகள்)

மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் (சுரங்கம் தோண்டும் நபர்களை சுற்றாடல் பாதுகாப்பின் முன்னிட்டு ஊக்கப்படுத்தல், சுரங்கங்களில் மேற்கொள்ளப்படுகின்ற சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்)

உரிமங்கள் வழங்கப்பட்டதனால் ஈட்டப்பட்ட வருமானம்

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் 1992ஆம் ஆண்டில் 33ஆம் இலக்க சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின்படி பின்வரும் உரிமங்களை வழங்குகிறது.

**அகழ்ந்தெடுப்பதற்கான உரிமம்**

தோண்டுவதற்கான உரிமம் (கைவினைஞர்சார் சுரங்கம் தோண்டுதல், கைத்தொழில்சார் சுரங்கம் தூண்டுதல், சிறப்புக்குரிய கனிப்பொருட்கள்)

**வியாபார உரிமங்கள்**

**ஏற்றுமதி உரிமங்கள்**

**இடம்பெயர்தலுக்கான (கொண்டு செல்லல்) உரிமங்கள்**

**வழங்கப்படும் உரிமங்கள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.**

**அகழ்ந்தெடுப்பதற்கான உரிமம் (EL) - (வருமானம்)**

இந்த உரிமத்தை பெற்றுக் கொள்பவர்களுக்கு அதனால் அனுமதி அளிக்கப்பட்டுள்ள அனைத்து விதமான கனிப்பொருட்களையும் அகழ்தெடுப்பதற்கான உரிமை உண்டு.

சுரங்கம் தோண்டுவதற்கான உரிமம்

**கைவினைஞர்சார் சுரங்கம் தோண்டுதல் (AML) - (வருமானம்)**

இந்த உரிமத்தை பெற்றுக் கொள்பவர்களுக்கு அதனால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளவாறு 10 ஹெக்ரயர் நிலப்பரப்பை விஞ்சாத ஒரு பிரதேசத்தில் அல்லது 25 மீற்றருக்கும் மேற்படாத ஆழத்தில் காணப்படும் அனைத்து விதமான கனிப் பொருட்களை தோண்டி எடுத்தல், பதனிடுதல் மற்றும் வியாபாரம் செய்வதற்கான உரிமை உண்டு.

வகுதி அ - கீழே தரப்பட்டுள்ள நிபந்தனைகளில் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்டவை இதில் அடங்கும்.

துளையின் ஆழம் 1.5 மீற்றருக்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.

உற்பத்திஅளவு மாதம் ஒன்றுக்கு100 அ3குறையாமலும் 600 அ3இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

பொறித்தொகுதி எதனையும் பயன்படுத்தக்கூடாது.

துளையின் ஆழம் 1.5 மீற்றருக்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.

உற்பத்திஅளவு மாதம் ஒன்றுக்கு100 அ3இற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

பொறித்தொகுதி எதனையும் பயன்படுத்தக்கூடாது.

**கைத்தொழில்சார் சுரங்கம் தோண்டுதல் (IML) - (வருமானம்)**

இந்த உரிமத்தை பெற்றுக் கொள்பவர் குறித்துரைக்கப்பட்ட பிரதேசத்தில் காணப்படும் கனிப்பொருட்களை அகழ்ந்தெடுத்தல், தோண்டி எடுத்தல், மற்றும் வியாபாரம் செய்வதற்கான உரிமை உடையவராவார். மூன்று வகுதிகளின் கீழ் கைத்தொழில்சார் உரிமங்கள் வழங்கப்படுகின்றன..

**வகுதி அ** - கீழே தரப்பட்டுள்ள நிபந்தனைகளில் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்டவை இதில் அடங்கும்.

வெடிவைத்தல் முறை - பல் துளைகள் காணப்படும் தாமத வெடிப்பு

துளையின் ஆழம் - 3 மீற்றருக்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.

உற்பத்தி அளவு - மாதம் ஒன்றுக்கு $1500m^3$ இற்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.பொறித்தொகுதி எதனையும் பயன்படுத்தக்கூடாது.

பயன்படுத்தும் இயந்திரங்கள் - சுவடு துரப்பணம், பாறைத்துரப்பணம்,பாறை உடை கருவி, முகப்பு முனை அகழ்கலன் உட்பட ஏனைய இயந்திரங்கள்

**வகுதி ஆ** - கீழே தரப்பட்டுள்ள நிபந்தனைகளில் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்டவை இதில் அடங்கும்.

வெடிவைத்தல் முறை - ஒரு துளை வெடிப்பு

துளையின் ஆழம் - 1.5 மீற்றருக்கு குறையாமலும் 3 மீற்றருக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

உற்பத்திஅளவு - மாதம் ஒன்றுக்கு $1500m^3$ அளவிலும் $1500m^3$ இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

பயன்படுத்தும் இயந்திரங்கள் - பாறைத்துரப்பணம் மட்டும்

**வகுதி இ** - கீழே தரப்பட்டுள்ள நிபந்தனைகளில் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்டவை இதில் அடங்கும்.

வெடிவைத்தல் முறை - ஒரு துளை வெடிப்பு

துளையின் ஆழம் - 1.5 மீற்றருக்கும்குறைவாக இருத்தல் வேண்டும்.

உற்பத்திஅளவு - மாதம் ஒன்றுக்கு $600m^3$ இற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

பயன்படுத்தும் இயந்திரங்கள் - பாறைத்துரப்பணம் மட்டும்

**விசேட உரிமங்கள்** (RML) - **(வருமானம்)**

அமைச்சரின் அங்கீகாரத்துடன் உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள கனிப்பொருட்களை அகழ்ந்தெடுத்தல், தோண்டி எடுத்தல்,பதனிடுதல் மற்றும் வியாபாரம் செய்வதற்கான அனுமதியை வழங்கலாம்.

**வியாபார உரிமம்** (TDL) - **(வருமானம்)**

பணிப்பாளரின் விசேட அங்கீகாரத்துடன் உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள கனிப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கும், களஞ்சியப்படுத்தவும்,வியாபாரம் செய்யவும் தனியுரிமையற்ற அனுமதி வழங்கப்படும். மேலும், உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள கனிப்பொருட்களை ஏற்றுமதி செய்யவும் அனுமதி வழங்கப்படும்.

வகுதி அ - ஏற்றுமதிக்கான கனிப்பொருட்கள் விற்பனை

வகுதி ஆ - உள்நாட்டில் கனிப்பொருட்கள் விற்பனை

வகுதி இ - கையாள் உற்பத்தி செய்யப்படும் அரிகல் மற்றும் சுண்ணாம்பு விற்கனை

**இடம்பெயர்த்தல் உரிமம் - (வருமானம்)**


உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள கனிப்பொருட்கள் அல்லது கனிப்பொருட்கள் அடங்கிய பொருட்களை உரிமத்தில் சொல்லப்பட்டுள்ள அளவுகள் மற்றும் குறித்துரைக்கப்பட்டுள்ள காலத்தினுள் இடம்பெயர்த்தலுக்கு இதன் மூலம் அனுமதியளிக்கப்படும். கனிப்பொருட்கள் அல்லது கனிப்பொருட்கள் அடங்கிய பொருட்களை இடம்பெயர்க்க கனிப்பொருட்களை அகழ்ந்தெடுத்தல், தோண்டி எடுத்தல், மற்றும் வியாபாரம் செய்வதற்கான உரிமங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**கனிப்பொருள் ஏற்றுமதி - (வருமானம்)**

கனிப்பொருட்களை அகழ்ந்தெடுத்தல், தோண்டி எடுத்தல், மற்றும் வியாபாரம் செய்வதற்கான உரிமங்களில் சொல்லப்பட்டுள்ள கனிப்பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் பணிப்பாளரிடம் விசேட அனுமதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**அரசுரிமைக் கட்டணம் - (வருமானம்)**

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தால் அறவிடப்படும் அரசுரிமைக் கட்டணம் கீழ்வரும் உருக்களில் காட்டப்பட்டுள்ளது. அறவிடப்பட்டுள்ள அரசுரிமைக் கட்டணங்களில் சாதாரண அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதை இவ்வுருக்கள் காட்டுகின்றன.




உரு 1: 2015 தொடக்கம் 2017 வரையான அரசுரிமைக் கட்டணம்

| ஆண்டு | அரசுரிமைக் கட்டணம் | ரூ.மி | ஆண்டு ரூ.மி | அரசுரிமைக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 05 | 143.06 | | 2012 | 732.71 |
| 2006 | 150.26 | | 2013 | 681.27 |
| 2007 | 199.66 | | 2014 | 1,128.46 |
| 2008 | 284.05 | | 2015 | 1,293.43 |
| 2009 | 378.29 | | 2016 | 1,578.58 |
| 2010 | 453.85 | | 2017 | 4,626.03 |
| 2011 | 586.89 | | | |

சுரங்கங்கள் சோதனையிடப்பட்டதால் ஈட்டப்பட்ட வருமானம்

உரு 2: 2005 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதியில் சுரங்கங்கள் சோதனையிடப்பட்டதால் ஈட்டப்பட்ட வருமானம்.






Fig. 2: Income generated by mines inspection during the period of 2005 to 2017

| ஆண்டு | பரிசோதனைக் கட்டணம் (ரூ.மி) | ஆண்டு | பரிசோதனைக் கட்டணம் (ரூ.மி) |
|---|---|---|---|
| 2005 | 5.25 | 2012 | 142.52 |
| 2006 | 4.43 | 2013 | 153.23 |
| 2007 | 5.61 | 2014 | 140.15 |
| 2008 | 30.07 | 2015 | 182.94 |
| 2009 | 52.76 | 2016 | 247.95 |
| 2010 | 95.45 | 2017 | 260.39 |
| 2011 | 128.42 | | |

உரிமங்கள் வழங்கப்பட்டதால் ஈட்டப்பட்ட வருமானம்

உரு3: 2005 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதியில் உரிமங்கள் வழங்கப்பட்டதால் ஈட்டப்பட்ட வருமானம்




| ஆண்டு | உரிமக் கட்டணம் (ரூ.மி) | ஆண்டு | உரிமக் கட்டணம் (ரூ.மி) |
|---|---|---|---|
| 2005 | 36.05 | 2012 | 69.82 |
| 2006 | 47.04 | 2013 | 91.15 |
| 2007 | 48.04 | 2014 | 75.60 |
| 2008 | 41.90 | 2015 | 80.00 |
| 2009 | 45.07 | 2016 | 224.80 |
| 2010 | 57.64 | 2017 | 275.65 |
| 2011 | 79.46 | | |

# செயல் நிறைவேற்றச் சுருக்கம் (நிதி மற்றும் பௌதீக) 2017ஆம் ஆண்டு

| கூறுகள் / தொழிற்பாடுகள் | நிதி பௌதீக | நிதி வகை | அலகு | வருடாந்த ஒதுக்கீடும் இலக்குகளும் | நிதி, பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| 1992ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின்படி உரிமம் வழங்கல் | | | | | |
| கைவினைஞர்சார் சுரங்கம் தோண்டும் உரிமம் (AML) | | | | | |
| கைவினைஞர்சார் சுரங்கம் தோண்டும் உரிமம் - ஏ | நிதி | வருமானம் | ரூபா. மி | 5.000 | 4.203 |
| கைவினைஞர்சார் சுரங்கம் தோண்டும் உரிமம் - பீ | பௌதீக<br>நிதி<br>பௌதீக | வருமானம் | இல<br>ரூபா. மி<br>இல | 1728<br>3.000<br>2333 | 1401<br>2.539<br>2031 |
| கைத்தொழில் சுரங்கம் தோண்டும் உரிமம் (IML) | | | | | |
| கைத்தொழில் சுரங்கம் தோண்டும் உரிமம் - ஏ | நிதி<br>பௌதீக | வருமானம் | ரூபா. மி<br>இல | 5.000<br>247 | 11.160<br>304 |
| கைத்தொழில் சுரங்கம் தோண்டும் உரிமம் - பி | நிதி<br>பௌதீக | வருமானம் | ரூபா. மி<br>இல | 12.000<br>1550 | 14.512<br>1791 |
| கைத்தொழில் சுரங்கம் தோண்டும் உரிமம் - சீ | நிதி<br>பௌதீக | வருமானம் | ரூபா. மி<br>இல | 3.000<br>730 | 2.352<br>588 |
| வர்த்தக உரிமம் (TDL) | | | | | |
| வர்த்தக உரிமம் - ஏ | நிதி<br>பௌதீக | வருமானம் | ரூபா. மி<br>இல | 0.100<br>15 | 0.082<br>11 |
| வர்த்தக உரிமம் - பி | நிதி<br>பௌதீக | வருமானம் | ரூபா. மி<br>இல | 7.000<br>1306 | 13.890<br>2778 |
| வர்த்தக உரிமம் - சீ | நிதி<br>பௌதீக | வருமானம் | ரூபா. மி<br>இல | -<br>- | 0.005<br>5 |
| இடம்பெயர்த்தல் உரிமம் (வீடு) | நிதி<br>பௌதீக | வருமானம் | ரூபா. மி<br>இல | 46.000<br>510297 | 75.245<br>836061 |
| ஏற்றுமதி உரிமம் | நிதி<br>பௌதீக | வருமானம் | ரூபா. மி<br>இல | 2.000<br>497 | 2.910<br>582 |
| அகழ்வு உரிமம் (EL) | நிதி<br>பௌதீக | வருமானம் | ரூபா. மி<br>இல | 15.000<br>- | 5.837<br>47 |
| அரசுரிமைக் கட்டண சேகரிப்பு | நிதி | வருமானம் | ரூபா. மி | 1661.000 | 4626.028 |
| சுரங்க சோதனைக் கட்டணம் | நிதி | வருமானம் | ரூபா. மி | 228.000 | 260.395 |
| உரிமக் கட்டண மீளளிப்பு பணி-கள் | நிதி | வருமானம் | ரூபா. மி | 10.000 | 5.502 |
| வங்கி உத்தரவாத பணிக் கட்டணம் | நிதி | வருமானம் | ரூபா. மி | 0.050 | 0.146 |
| நானாவித வருமானம் - தோண்டுதல் | நிதி | வருமானம் | ரூபா. மி | 3.000 | 0.302 |
| இடம்பெயர்த்தல் உரிமத்திற்கான சேவைக் கட்டணம் | நிதி | வருமானம் | ரூபா. மி | 30.000 | 41.567 |
| இடம்பெயர்த்தல் உரிமத்திற்கான சேவைக் கட்டணம் | நிதி | வருமானம் | ரூபா. மி | 5.000 | 2.756 |
| மாதிரி ஏற்றுமதி | நிதி | வருமானம் | ரூபா. மி | 1.000 | 0.076 |
(இ) உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய புவிச்சரிதவியல் பிரிவிற்குரிய 11 பரிசோதனை பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உள்ளகக் கணக்காய்வை வெளிப்படுத்துவதற்காக அந்தந்தப் பிரிவினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

**6.3 பெறுகை மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்**

**6.3.1 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணியகத்தால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைத் திட்டத்தில், ஆலோசனைச் சேவை மற்றும் மூலதனமற்ற பொருட்கள், பெறுகையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. தயாரிக்கப்பட்ட மூலதனப் பொருள் பெறுகைத் திட்டத்திற்காகவும் பெறுகை கால அட்டவணை தயாரிக்கப்படாதிருந்ததுடன் திட்டத்தை நாளதுவரையாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட வேண்டிய ரூபா 385,000,000 தொகையான 03 பெறுகைச் செயற்பாடுகள் ஆண்டின் போது ஆரம்பிக்கப்படாதிருந்ததும், பூர்த்தி செய்யப்பட வேண்டிய ரூபா 182,813,000 தொகையான 06 பெறுகைச் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவனத்தை மீளமைக்கும் பொறிமுறையில் அரசாங்கத்தின் கொள்கைகளை அமுல்படுத்துவதற்கான முறைமை ஆய்வொன்றை மேற்கொள்வதற்காக தனியார் நிறுவனத்திற்கு நான்கு வருடங்களுக்கு முன் செலுத்தப்பட்ட ரூபா 1,505,000 தொகை நிதிக்கூற்றுக்களில் நடைமுறை வேலையாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய முறையை தாபித்தல் 2018 யூன் வரை இடம்பெறவில்லை. இது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

## 6.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையே 27 சதவீதம் முதல் 218 சதவீதம் வரையிலும், பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும், உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 12 சதவீதம் முதல் 1203 சதவீதம் வரையிலான வீச்சிலும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6.5 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் உரிய நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், பணியத்தால் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கை 2018 யூன் மாதம் வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.6 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணியகத்தின் 04 உத்தியோகத்தர்கள் கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்றதன் பின்னர் உடன்படிக்கையின் பிரகாரம் கட்டாய சேவைக் காலத்தை பூர்த்தி செய்யாமல் சேவையிலிருந்து விலகியமையின்

காரணமாக அறவிட வேண்டிய தண்டப்பணம் மற்றும் ஏனைய செலவினங்கள் ரூபா 2,459,663 தொகையினை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது எடுக்கப்பட்டிக்கவில்லை.

(ஆ) முன்னாள் பணிப்பாளர் நாயகம் ஒருவர் பெறப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட ரூபா 597,231 பெறுமதியான உபகரணங்கள் களஞ்சியப் பதிவேடுகளில் பிழையான வகையில் பதிவு செய்யப்பட்டதாக கணக்காய்விற்கு அறிவித்திருந்த போதிலும், உரிய தவறு மீளாய்வாண்டின் போதும் சீரமைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வெளிநாட்டு சுற்றுலாவிற்காக பங்குபற்றிய பணியகத்தின் 09 உத்தியோகத்தர்களுக்கு 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 01/2010/01 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சு சுற்றறிக்கையின் 6(iii) ஆம் பிரிவிற்கு முரணாக தீர்மானிக்கப்பட இணைந்த படிகளை விஞ்சி ரூபா 469,300 தொகையொன்று 2015 ஆம் ஆண்டின் போது மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போதும் இப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கனிய மணல் ஏற்றுமதி செய்யும் அந்த மணலின் கப்பல் வரை இலவசம் (எப்ஓபீ) பெறுமதி அடிப்படையில் 7 சதவீத அரசிறை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் தனியார் கம்பனியால் கனிய மணல் ஏற்றுமதி செய்யும் போது உரிய கப்பல் வரை இலவசம் பெறுமதி பிழையாக கணிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக அரசிறை குறைவாகச் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையிலும் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், கண்டறிந்து சரியான பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) முன்னைய ஆண்டில் சேவை பெறுவோருக்காக கொள்வனவு செய்யப்பட்டு அவரினால் மீளளிப்புச் செய்யப்பட்ட ரூபா 964,300 பெறுமதியான சொத்துக்கள் பணியகத்தின் சொத்தாக கணக்கீடு செய்தல் மீளாய்வாண்டின் போதும் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.7 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கனியவள அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்கும் போது அனுமதிப்பத்திரத்தில் அகழ்வு நிலத்தை மீளமைப்பதற்கான நிபந்தனை

உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அகழ்வு நிலத்தை மீளமைப்பதற்காக அனுமதிப்பத்திரதாரரின் உடன்பாட்டிற்கான வங்கி பிணையும் பணியகத்தால் பெறப்பட்டிருந்தது. எனினும், அனுமதிப்பத்திரதாரர்கள் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறியிருந்ததுடன் வங்கி பிணை முறியை பெற்று அல்லது நிலத்தை மீளமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிக்கவில்லை. இதன் போது நிபந்தனைகளை மீறிய அனுமதிப்பத்திரதாரர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும், கறுப்பு பட்டியலில் உள்ளடக்கி அனுமதிப்பத்திரம் மீண்டும் வழங்குதலை நிராகரிப்பதற்கும் பணியகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி மேற்கொள்கின்ற கனிய வளங்கள் அகற்றல்களின் காரணமாக மிக மோசமான சூழல் மற்றும் சமூக ரீதியான பிரச்சினைகள் எழுந்திருந்தமை அவதானிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான கனியவள அகழ்வுகளை தடுப்பதற்காக பணியகத்தால் போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பணியகத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் மீது விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) சில புத்தகங்கள் பேணப்படாமை. |
| | (ii) சில இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் மற்றும் கொள்கைகள் பின்பற்றப்படாமை. |
| | (iii) நாட்குறிப்புப் பதிவுகள் அங்கீகரிக்கப்படாமை |
| (ஆ) ஆய்வுகூட அறிக்கை விநியோகித்தல் | அறிக்கை விநியோகிக்கும் முறைமை குறித்துரைக்கப்பட்ட மற்றும் எழுத்து மூலம் |

| | | |
|---|---|---|
| | | பேணிச் செல்லல் மற்றும் உரிய பிரிவிற்கு அறிவிக்கப்படாமை. |
| (இ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) கனியவள போக்குவரத்து தொடர்பான தீர்மானம் எடுத்தல் பணிப்பாளர் நாயகத்தால் எடுக்கப்படாமை. |
| | | (ii) பதவிகளுக்காக கிடைக்கின்ற வருமானம் தொடர்பாக பதிவேடொன்று பேணப்படாமை. |
| (ஈ) | சில்லறைக் காசு கட்டுநிதியின் பாவனை | பிரதேச அலுவலகங்கள் சில்லறைக் காசு கட்டுநிதியை பயன்படுத்திய மாதாந்த பற்றுச்சீட்டு தீர்க்கப்படாமை |
| (உ) | ஊழியர் முகாமைத்துவம் | (i) பதவிகளுக்காக கிடைக்கின்ற விண்ணப்பங்கள் தொடர்பாக பதிவதற்கு பதிவேடொன்று பணிப்பாளர் நாயகத்தால் பேணப்படாமை. |
| | | (ii) பணிப்பாளர் (நிதி) பதவிக்காக ஆட்சேர்க்கும் போது விண்ணப்பதாரருக்கு புள்ளிகள் வழங்குதல் வெளிப்படையாகக் காணப்படாமை. |
| (ஊ) | வாகனக் கட்டுப்பாடு | (i) நிதிப்பிரமாணம் 1645 மற்றும் 1646 இன் பிரகாரம் வாகன சம்பவத் திரட்டு பத்தகம் நாளதுவரையாகப் பேணிச் செல்லப்படாமை. |
| | | (ii) நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த ஓட்டப்பொழிப்பு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாமை. |


(iii) அம்பாறை மற்றும் களுத்துறை பிரதேச அலுவலகங்களின் கடமைகளுக்காக வழங்கப்பட்ட 02 வாகனங்களில் சில ஒட்டக் குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்படாமை.

(iv) ஒட்டக் குறிப்பின் பிரகாரம் அம்பாறை மற்றும் களுத்துறை பிரதேச அலுவலகங்களுக்கு நியமிக்கப்பட்ட வாகனத்திற்குரிய பிரயாணங்கள், கடமை பிரயாணங்கள் என உறுதிப்படுத்தப்படாமை.

(v) வாகன பழுதுபார்த்தலுக்காக கராஜ் பதிவு செய்யப்படாமை

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ..
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி



# கணக்காய்வாளரின் அறிக்கை - பதில்கள்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி

தேசிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி காரியாலயம்
இலக்கம் 306/72, பொல்தூவ வீதி

பத்தரமுல்லை.

புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் 2017 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைகின்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் பற்றிய 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.2.1 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள்**

கணக்காய்வுசார் உசாவலில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்திற்கான தொழில்நுட்பச் சேவைகள் கம்பெனியின் 66மூ வீதமான பங்குகளுக்கான முதலீட்டினை புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் மேற்கொண்டுள்ளதோடு அவ்வாறு முதலீடு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் கணக்கு அறிக்கைகள் ஒருங்கிணைக்கப்பட சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ள போதிலும் புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்திற்கான தொழில்நுட்பச் சேவைகள் கம்பெனியின் கணக்காண்டு வித்தியாசமாக அமைந்திருப்பதானது அப்பணியினை நிறைவேற்றிக் கொள்வதில் காணப்படுகின்ற ஒரு சிக்கலாகும்.

இது தொடர்பாக விடயங்கள் கலந்துரையாடப்பட்டதன் பின்னர் கணக்காண்டினை ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரை மாற்றியமைத்துக் கொள்வதற்காக புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்திற்கான தொழில்நுட்பச் சேவைகள் கம்பெனியின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்தது. அதன் பின்னர் கம்பெனிப் பதிவாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் போன்ற நிறுவனங்களினதும் கணக்காண்டினை மாற்றியமைத்துக் கொள்ளும் பொருட்டு சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனால் அந்த நடவடிக்கையானது தற்போது இடம்பெற்று வருகின்றது என்பதனை

தெரிவிக்கின்றேன். அதன் பிரகாரம் புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்திற்கான தொழில்நுட்பச் சேவைகள் கம்பெனியின் கணக்காண்டானது ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரை சட்டரீதியாக மாற்றியமைத்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் கணக்குகளுடன் ஒருங்கிணைக்க முடியும் என்பதால் அந்நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்.

**2.2.2 தொடர்புடைய தரப்புக்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்படாமை**

(அ)பணியகத்தின் தலைவர் பதவி வழி அதிகாரத்தில் கம்பெனியின் தலைவர் ஆவார். இது எதிர்காலத்தில் கணக்கு குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ)பற்றுக் குறிப்புகள் அல்லது அறிவித்தல்கள் மூலம் குறிப்பிட்ட நிறுவனமானது பணியகத்தினை விழிப்பூட்டவில்லை என்பதாலும் அதற்குரிய முறையான ஆவணங்கள் முன்வைக்கப்படவில்லை என்பதாலும் இதனை கணக்குப் பதிய முடியாது. எனவே இது நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்படவில்லை.

(இ) - (ஈ) எதிர்காலத்தில் இத்தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**2.2.3 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02

(ை)(ை)(ை) 2018 ஆம் ஆண்டுக்கான நிதிப் பிரவாக கூற்றுக்களில் சரியாக தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03

கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வகையில் 2018 ஆம் ஆண்டில் வெளிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07

உரிய சீர்படுத்தல்கள் 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தொடக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஈ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 08

(ை) எதிர்வரும் கணக்காண்டில் சார்ந்த பொறுப்புக்கள் (ஊழவெவைபெநவெ டுயைடிடைவைநைள) குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்படும்.

(ஸை) எதிர்காலத்தில் வழக்கு நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### 2.2.4 கணக்கீட்டுக் கொள்கைகள்

2018 ஆம் ஆண்டில் அறவிட முடியாக் கடன் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 2.2.5 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) பற்று குறிப்புகள் அல்லது அறிவித்தல்கள் மூலம் பணியகமானது விழிப்பூட்டப்படவில்லை என்பதாலும் அதற்குரிய முறையான ஆவணங்கள் முன்வைக்கப்படவில்லை என்பதாலும் இதனை கணக்குப் பதிய முடியாது.

(ஆ) உரிய சீர்படுத்தல்கள் 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(இ) பல்லேகலே சுனாமி தொடர்பாடல் நிலையத்தினை பராமரிப்பதற்காக கிடைக்கப்பெற்றுள்ள பணத்தினையும் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் கணக்குப் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஈ) எதிர்வரும் வருடத்தில் இது இருப்புக் கணக்கெடுப்புக்காக எடுத்துக்கொள்ளப்படும்.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றின்மை

(அ) இதன் பௌதீக இருப்பு உறுதிப்படுத்தப்படாமை தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு கருதப்படுகின்றது.

(ஆ) அங்கீகரிக்கப்படவில்லையெனப் பதிவாகிய அனைத்துக் குறிப்பேடு வவுச்சர்களும் 2018 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

## 2.3 வருமதியான மற்றும் சென்மதியான கணக்குகள்

குறிப்பிட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் வரியினை அறவிட்டுக்கொள்வதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதோடு இந்த வரி வகையானது இரத்துச் செய்யப்பட்டுள்ளதனால் அது தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து உறுதிப்படுத்திக்கொள்வதற்கு கருதப்படுகின்றது.

## 2.4 சட்ட திட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் அமைந்தொழுகாமை

(அ) 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சுரங்க மற்றும் கனிமவளப் பொருட்கள் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பணியகமானது ஈட்டுகின்ற வருமானத்தைக் கொண்டே செலவினை மேற்கொள்ள வேண்டும். எனவே அனைத்து உரிமப் பணமும் (அரசிறை) திறைசேரிக்கு அனுப்பப்படுவதற்கான சட்ட ரீதியான நிலைமையில்லை. எவ்வாறாயினம், பணியகத்தின் மிகைத் தொகையானது வருடாந்தம் பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்படுகின்றது. அதன் பிரகாரம் பொதுத்திறைசேரிக்கு 1000,000,000. ரூபா அனுப்பப்பட்டுள்ளது.

(ஆ) (ை) திறைசேரிக்கான அனுப்பல்கள் கணக்குகளில் சரி செய்யப்பட்டுள்ளது.

(ஐஐ) நிலையான வைப்புக்களின் பொருட்டு தேவையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் திறைசேரி உண்டியல்களுக்காகவும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஸை) 2016 ஆம் ஆண்டுக்குரிதாக வெளியிடப்பட்ட நிதிச் சட்டத்தின் 13(7) பிரிவின் பிரகாரமான அறிக்கையானது நிறுவனத்தின் கணக்காய்வு முகாமைத்துவ குழுவில் கலந்துரையாடப்பட்டதோடு அது 2017/10/31 ஆம் திகதிய கணக்காய்வுக் குழு அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும் இடம் பெற்ற சிறிய தவறின் காரணமாக குறிப்பிட்ட அறிக்கை சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிப்பதற்கு முடியாமல் சென்றுள்ளதோடு நிதிச் சட்டத்தின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள காலப்பகுதி கடந்துள்ளதனால் எதிர்வரும் வருடத்தின் கணக்காய்வு அறிக்கைக்கு உரிய திகதியில் பதில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) பணிக்கொடை சட்டத்தின் ஏற்பாடுகளில் இதற்கான அவகாசம் இருப்பதாக தொழில் ஆணையாளரால் வழங்கப்பட்டுள்ள தெளிவுபடுத்தல்களை கருத்திற்கொண்டு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சரியான செலுத்தல் ஒன்றே இதுவாகும். எனவே மேலதிக செலுத்தல் இடம்பெறவில்லை. பணிக்கொடைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தொழிற்சங்கம் மற்றும் தொழிலாளர், தொழில் கொள்வோர் தரப்புகளுக்கு இடையில் ஒப்பந்தங்களுக்கு வரப்பட்டு பணிக்கொடை கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட வழக்கு ஒன்றின்போதும் தொழிலாளர்களுக்கு நன்மை தரக்கூடிய வகையில் பணிக்கொடை செலுத்தப்படுதலானது செலுத்துவதற்காக பணிக்கப்பட்டுள்ள அளவினை விட அதிகரிப்பது நியாயமானதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ஈ) (ை) தற்போது வாகன விபத்துக்கள் தொடர்பாக காப்புறுதித் தொகையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு பொலிஸ் அறிக்கைகள் கிடைக்கப்பட்டதன் பின்னர் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ை) இந்தப் பணி முன்பணம் செலுத்தித் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அதனை சரியாகக் கணக்குப் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) கணக்குகள் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அதன் பிரதிகள் அமைச்சுக்கும் பொதுத் திறைசேரிக்கும் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளதோடு அந்த அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு மாதமும் பணிப்பாளர் சபைக்கு இந்த விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பணிப்பாளர் சபை அறிக்கைகளை பரிசோதிப்பதன் மூலமும் இதனை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

(ஊ) இயந்திரப் பொறியியலாளர் ஒருவர் பணியகத்தில் இல்லை. அத்தகைய நிலைமையில் வெளியிலிருந்து அச் சேவைகளை பெற்றுக்கொள்வது நடைமுறை ரீதியில் கடினமாகும். எவ்வாறாயினும் கணக்காய்வின் அபிப்பிராயத்துடன் இணங்குவதோடு உயர் மட்டத்திலான திட்டங்களுக்காக அத்தகைய ஒருவரின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை பல வாகன திருத்தங்கள் ஏற்கனவே சம்பந்தப்பட்ட முகவர்களின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.5 போதிய அதிகாரத்துடன் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வகையில் அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் பெறுபேறுகள்

பணியகத்தின் 2017 ஆண்டுக்கான இலாபமானது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 3,188,251,321.˙ரூ ரூபாவிலான வளர்ச்சி காணப்படுகின்றது. இதற்காக அரசிறை வருமானம், அனுமதிப் பத்திர கட்டணங்கள் மற்றும் நிதிசார் வருமானம் அதிகரித்திருப்பதும் ஊழியர்களின் தீவிரமான அர்ப்பணிப்பும் செயலாற்றுகையின் அடிப்படையில் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் செலுத்தப்படுதலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

## 4. தொழிற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

### 4.1.1 திட்டமிடல்

(அ) 2019 - 2023 வரையிலான கூட்டுத்திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளன.

(அ) செயற்பாட்டுத்திட்டத்தில் இத்தகைய குறைபாடுகள் காணப்படும் பட்சத்தில் எதிர்காலத்தில் அவை சரிசெய்யப்படும்.

### 4.1.2 செயற்பாட்டு மீளாய்வு

(அ) பணியகத்தின் செயற்பாடுகளுக்கு மத்தியில் 2017 ஆம் ஆண்டில் புவிச் சரிதவியல் வரைபடங்கள் தயாரிக்கப்படுதல், கனிய வளங்கள்

இனங்காணப்படுதல் மற்றும் அவை மதிப்பீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கைகளுக்குரிய பணிகள் 2017 ஆம் ஆண்டுக்கான புவிச்சரிதவியல் பிரிவின் வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன. இருப்பினும் அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அத்தியாவசியமான மூலப் பொருளாகிய கிரவல், மணல்

மற்றும் கற்கள் என்பவற்றில் பற்றாக்குறை காணப்பட்டதனால் அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தாமதமடையும் என ஒப்பந்தகாரர்கள் அரசாங்கத்திற்கு அறிவித்ததன் பின்னர் பிரதமரின் ஆலோசகர் திரு. ஆர். பாஸ்கரலிங்கம் அவர்களின் வேண்டுகோளின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டுக்கான இரண்டாம் காலாண்டு தொடக்கம் ஒட்டுமொத்த இலங்கையும் உள்வாங்கப்படுகின்ற வகையில் துரித கட்டிடப் பொருட்கள் மீளாய்வு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பொருட்டு 2017 ஆம் ஆண்டில் 19 மாவட்டங்கள் உள்வாங்கப்படுகின்ற வகையில் புவியியலாளர்களை ஈடுபடுத்துவதற்கு நேர்ந்தமையினால் 2017 ஆம் ஆண்டுக்கான வேலைகளில் தாமதங்கள் ஏற்பட்டன.

எவ்வாறாயினும் கனிய வளங்கள் இனங்காணப்படுதல், ஆய்வு செய்யப்படுதல் தொடர்பாக அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டதொடு அவை 2017 ஆம் ஆண்டு தொடக்கம் நடமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக கனிம பொருட்கள் மீதான முதலீடுகள் தொடர்பாக கௌரவ மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சருக்கு அறிவுறுத்தல்கள் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(ஆ) ஒரு வலுவூட்டல் அலகு தற்போது தாபிக்கப்பட்டுள்ளது.

(இ) கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இவ் விடயம் தொடர்பாக கவனம் செலுத்தப்படுவதோடு உரிய சரிசெய்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

(அ) சுரங்க மற்றும் கனிப் பொருள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் பணியகமானது ஆரம்பத்திலிருந்து இதுவரையும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியரிடமிருந்து 10% மும் தொழில் வழங்குனரிடமிருந்து 12% மும் பங்களிப்புச் செய்தது. இவ்விடயம் தொடர்பாக தொழில் ஆணையாளரினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் எதிர்வருடத்திற்காக 15% பணியகம் பங்களிப்பு நல்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதோடு அது தொடர்பாக கணக்குப் பதிவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஆ) தற்போது கள உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதனால் இந்த நிலைமையானது குறைவடையும்.

(இ) மணல் மற்றும் கிரவல் என்பவற்றுக்காக னுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும்போது கள உத்தியோகத்தர்களினால் களப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உரிய அறிக்கைகள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டு அகழ்வு செய்யப்படுகின்ற கனிப் பொருளின் அளவிற்காக போக்குவரத்து அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். ஏனைய கனிமங்களுக்காக அகழ்வுப் பொறியியலாளர்களினால் 06 மாதங்களுக்கு ஒருமுறை சம்பந்தப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில் கனிம அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்படுகின்றன. மேலும் அங்கீகரிக்கப்பட்ட அளவினை விஞ்சி மேற்கொள்ளப்படுகின்ற அகழ்வுகள் தொடர்பாக வெளிப்படும் பட்சத்தில் தொழில்நுட்ப அறிக்கைகளின் அடிப்படையில் உரிய அரசிறை அறவிட்டுக்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) அனுமதிப் பத்திரங்களை விநியோகிக்கும்போது இடம்பெறுகின்ற தாமதத்தைத் தடுப்பதற்காக ஏற்கனவே பணியகமானது ஏனைய நிறுவனங்களினதும் உதவியோடு ழநெ ளவழி ிசழதநஉவ எனும் கருத்திட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்த முறையின் போது 06 வாரங்களுக்குள் விண்ணப்பதாரருக்கு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்கப்பட முடியும். எனவே எதிர்காலத்தில் முற்பணம் பெற்றுக்கொள்ளப்படுவது குறைவடையும்.

(உ) பணியகத்தின் சேவைகளை இடையறாது பேணிச் செல்வதற்கு நேரிடுதல் மற்றும் பணியகத்தில் நிரந்தர பதவியணியில் காணப்படுகின்ற பற்றாக்குறை காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் புதிய பதவியணியினரை அங்கீகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதோடு அதன் பின்னர் வெளியிலிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான தேவை ஏற்படமாட்டாது.

(ஊ) இந்த நிலைமையானது ஏற்கனவே பணியகத்தினால் புரிந்து கொள்ளப்பட்டுள்ளதோடு அதனைத் தடுப்பதற்காக புதிய தொழில்நுட்ப உபகரணங்களை (வுசயஉமபெ ளுலளவநஅ) பயன்படுத்துவதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(எ) சட்டரீதியாக அதனை சுவீகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இது காணி அமைச்சு மற்றும் பிரதேச செயலகங்கள் போன்ற நிறுவனங்களின் இடையீட்டுடன் இடம்பெறுகின்ற, காலதாமதம் ஏற்படக்கூடிய ஒரு செயன்முறையாகும்.

## 4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

(அ) இது தொடர்பாக ஆராய்ந்து அறவிடப்படாத அரசிறை தொடர்பாக வெளிப்படும் பட்சத்தில் அதனை அறவிட்டுக்கொள்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஆ) ஊக்குவி ப்புக் கொடுப்பனவுகள் செலுத்தப்படுதல்

(ஐ) 1996 ஆகஸ்ட் 02 ஆம் திகதிய திறைசேரி கடித இலக்கம் ீநு1/000/6 (ஐஎநவெளைந) இன் மூலம் வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்தின் பிரகாரம் பணியகமானது ஊக்குவிப்புக் கொடுப்பனவினை முறையாக மேற்கொண்டுள்ளது. மேலும், செலுத்தல் முறையியலானது தற்போது பணியகத்தின் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் இடம்பெறுகின்றது.

(ஸை) ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளுக்காக ஏற்புடையதாக அமைத்துக் கொள்ளப்படும் 199,851,558/- ரூபா தொகையில் 50% வீதமாகிய 99,925,779 ரூபாவிலான தொகை பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின்படி ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளுக்காக வழங்கப்பட்டுள்ளது.

(ஸைை) இந்த வருடத்திலிருந்து சரியான செயலாற்றுகை கற்கையின் மீது இடம்பெறுகின்றது.

(ஸை) பணியகத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு செலுத்தப்படுகின்ற ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளிலிருந்து இத் தொகையினைக் கழித்து இடர் நோய் நிதியத்திற்கு வழங்கப்படுகின்றது. இந்த நிதியம் ஆனது அரசாங்கத்தின் நிதியின் மூலம் பேணப்படவில்லை. மிகவும் பாரதூரமாக நோய்வாய்ப்படுகின்ற நிர்க்கதியான ஊழியர்களுக்கு பாரதூரமான நோய் நிலைமைகளின்போது உதவியளிப்பது இதன் நோக்கமாகும். சிறுநீரகங்கள் பொருத்தப்பட்டுள்ள இரண்டு தொழிலாளர்களுக்கு அண்மையில் உதவியளிப்பதற்கு வாய்ப்பு கிடைத்தது. இது அரசாங்க பணத்தினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படவில்லை என்பதால் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதில்லை என்பதோடு கணக்குகளிலும் காட்டப்பட வேண்டியதில்லை. எதிர்காலத்தில் நலனோம்பல் நடவடிக்கைகளாக கணக்குகளுக்கு புறம்பாக முன்னெடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(எ) ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்ட ஆரம்ப வருடத்திலிருந்து கடந்த வருடம் வரை நேரடி செலவினங்கள் மற்றும் பொதுப்பணி செலவினங்களாக வருமானத்தில் 15% கருதப்பட்டது. இருப்பினும் அதற்கான துல்லியமான அடிப்படை காணப்படாதமையினால் அது தொடர்பாக விதப்புரை செய்யும் பொருட்டு குழு ஒன்று நியமிக்கப்பட்டது. நேரடி செலவினங்கள் மற்றும் பொதுப்பணி செலவினங்களாக ஆகக்குறைந்தது 10மூ கழிக்குமாறு மேற்படி குழு தீர்மானித்தது.

(எை) 110 மில்லியன் ரூபா மீளாய்வான்டில் மதிப்பீட்டு இலாபத்தினை அடிப்படையாக க் கொண்டு ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(எைை) இச்செலுத்தலுக்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

(இ) யான் ஓயா நீர்த்தேக்கக் கருத்திட்டம்

(ை) யான் ஓயா கருத்திட்டத்தின் கீழ் நீரினால் மூழ்கவுள்ள காணியிலிருந்த மணல் படிவம் நீர் நிரப்பப்படுவதற்கு முன்பு அகற்றிக் கொள்ளப்பட வேண்டும் என பணியகத்திற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. எனவே இந்த கருத்திட்டத்திற்கான காணியில் காணப்பட்ட மணல் படிவம் சந்தையில் காணப்பட்ட ஆற்று மணல் பற்றாக்குறையை ஈடு செய்வதற்காகவும் மணல்

விலையை குறைப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்டது. அதேவேளை யான் ஓயாவில் நீர் நிரப்புவதற்கு முன்னர் அகற்றுவதற்கு நேரிடுவதனால் மணல் படிவத்தினை ஆய்வு செய்து மதிப்பீடு செய்வதற்கு கூடிய காலப்பகுதி எடுக்கப்படுவதால் மதிப்பீடு செய்யப்படாமல் அகழ்வுகளை மேற்கொள்வதற்கு ஏனைய நிறுவனங்களின் அனுமதியோடு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

(ஸை) யான் ஓயா நீர்த்தேக்க கருத்திட்டமானது அடிப்படை சுற்றாடல் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட ஒரு கருத்திட்டம் என்பதனாலும் குறிப்பிட்ட அடிப்படை சுற்றாடல் மதிப்பீட்டின்போது தொல்பொருள் திணைக்களம் மதிப்பீடுகளை மேற்கொள்வதனாலும் மீண்டும் தொல்பொருள் திணைக்களத்திலிருந்து அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை கிடையாது.

(ஸைை) ஏற்கனவே யான் ஓயா கருத்திட்டத்தில் மணல் அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுதலின்

கீழ் மேற்கொள்ளப்படுகின்ற புனரமைப்பு நடவடிக்கைகளை நிர்ப்பாசனத் திணைக்களம், வனப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் பணியகம் என்பவற்றினது பங்கேற்பில் மேற்கொள்வதற்கு தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஸை) சில அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் மேற்கொண்டும் செல்லுபடியானவைகளாக ஆக்கப்படவுள்ளன. அகழ்வுகள் முடிவுறுத்திப்பட்ட காணிகளை புனரமைப்பதற்காக மேற்படி (ஸை) ஆம் இலக்கத்தின் கிழ் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(எ) பணியகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம் பணியகத்தினால் அரசிறை அறவிட்டுக் கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) இந்த நிலைமையை தடுப்பதற்காக தற்போது பணியகத்தில் அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்படுவதற்கான கட்டளைகள் திருத்தப்பட்டு வருகின்றன.

(உ) போதிய பணியாளர் தொகுதி இல்லாததினால் சேவைக்கான தேவையின் அடிப்படையில் இது இடம்பெற்றது.

### 4.4 கட்புல முறைகேடுகள்

2014 ஆம் ஆண்டு சுற்றாடல் மற்றும் மீள்பிறப்பாக்க வலுசக்தி அமைச்சரின் எழுத்து மூலமான ஆலோசனைகளின் பிரகாரம் பொதுமக்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் இத் தொகையானது தலைவரிடம் விடுவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் நடத்தப்பட்ட தேர்தலின் பின்னர் தலைவர் விலகிச் சென்றதனால் குறிப்பிட்ட பணிக்குரிய ஆவணங்கள் இல்லாதமையினால் இது செலுத்தித் தீர்க்கப்படாத முற்பணமாக கணக்குகளில் காட்டப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு எதிர்கால நடவடிக்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 4.5 முறையாகச் சுவீகரிக்கப்படாத காணிகளில / ஆதனங்களில் கருத்திட்டங்களை ஆரம்பித்தல்.

இவ்விடயம் தொடர்பாக பணியகமானது மீண்டும் விசாரித்ததோடு குறிப்பிட்ட கட்டிடத்தை மீண்டும் நிர்மாணிப்பதற்காக மாவட்டச் செயலாளர் அங்கீகாரம் அளித்துள்ளார். தற்போது குறிப்பிட்ட கட்டடத்தின் இரண்டாம் கட்டப் பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

### 4.6 பிற அரச நிறுவனங்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் வளங்கள்

இது அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் இடம்பெற்றுள்ளது. அமைச்சரவையின் தீர்மானங்களுக்கு எதிராக செய்யப்பட முடியாது.

### 4.7 பதவியணி நிர்வாகம்

(அ) 02 உதவிப் பணிப்பாளர் (நிதி) பதவிகளும் 06 கள உதவியாளர் பதவிகளும் தவிர ஏனைய பதவிகள் தற்போது நிரப்பப்பட்டுள்ளன. மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு அவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) சேவைக்கான தேவையின் அடிப்படையில் வெளி சேவை வழங்கும் ஒரு நிறுவனத்திலிருந்து ஊழியர்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதோடு பணியகத்திற்காக ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சம்பந்தப்பட்ட கம்பெனிக்கான செலுத்தல்கள் மேற்கொள்ளப்படுவது சம்பந்தப்பட்ட துறைத் தலைவர் பெற்றுத் தருகின்ற விதப்புரைகளின் அடிப்படையில் ஆகும். மேற்படி ஊழியர்களுள் சிலரது தகைமைகளில் குறைபாடுகள் காணப்படுகின்றன. இருப்பினும் நிரந்திர சேவையில் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

(இ) பணியகத்திற்கான அலுவலகங்களை பேணிச் செல்லும் பொருட்டு சேவையின் தேவை அடிப்படையில் இது மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) பணியகத்தின் நிரந்தரப் பதவியணி போதுமானதாக அமையவில்லை என்பதால் பயிற்சி பெறுநர்களும் சில பணிகளை நிறைவேற்றுகின்றனர்.

(உ) புதிய ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்படவில்லை என்பதனால் நிரந்தர களஞ்சியப் பொறுப்பாளர் ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்ய முடியாமல் போயுள்ளதுடன் சேவைக்கான தேவையின் அடிப்படையில் வெளிச்

சேவை வழங்கும் நிறுவனம் ஒன்றிலிருந்து அச் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி நடவடிக்கைமுறை அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் களஞ்சிய உத்தியோகத்தர் பதவி தற்போது நிரப்பப்பட்டுள்ளதுடன் மேற்கொண்டும் அச் சேவை வெளியில் இருந்து பெற்றுக் கொள்ளப்படவில்லை.

(ஊ) பணியகத்தின் நடவடிக்கைகளை இடையறாது பேணிச் செல்லும் பொருட்டு சேவைக்கான தேவையின் அடிப்படையில் 04 புவிச்சரிதவியல்லாளர்கள்

இணைத்துக்கொள்ளப்பட்டதோடு அது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(எ) நிதி முகாமையாளர் மற்றும் நிதி உத்தியோகத்தர் விலகிச்சென்றமையினால் பிரிவின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக நிதி ஆலோசகர் ஒருவரை தற்காலிகமாக இணைத்துக் கொள்ள வேண்டி ஏற்பட்டது. அவர் 06 மாத்த்தில் விலகிச் சென்றார். அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. தற்போது பணிப்பாளர் (நிதி) பதவி நிரப்பப்பட்டுள்ளது.

(ஏ) பணிப்பாளர்( நிதி) பதவி

(ை) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டிருப்பது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல்.. வர்த்தகவியல் துறையில் சிறப்பு பட்டம் பெற்றிருத்தல் மற்றும் அத்துறைக்குரியதாக பட்டப்பின் படிப்பு பட்டம் பெற்றிருத்தல் அல்லது,

ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்சார் பட்டய கணக்காளர் நிறுவனமொன்றில் முழுநேர அங்கத்துவம் பெற்றிருத்தல். அத்துடன்,

கூட்டுத்தாபனம் அல்லது நியதிச்சட்ட சபை ஒன்றில் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டத்தில் 13 வருடகால சேவை அனுபவம்.

(ை) செய்தித்தாள் அறிவித்தலின் ஆங்கில மொழிபெயர்ப்பில் 1 மற்றும் 2 அல்லது 3 என்பதற்குப் பதிலாக 1 அல்லது 2 என தெரிவிக்கப்பட்டிருந்தது. அது லேக் ஹவுஸ் நிறுவனத்தின் மொழிபெயர்ப்பின் குறைபாடு என்பதோடு அது நிர்வாகப் பிரிவின் கவனத்திற்கு உள்ளாகவில்லை.

எவ்வாறாயினும் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டபோது சரியான ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் அடிப்படையில் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. தகைமைகளைப் பூர்த்தி செய்யாத சில விண்ணப்பதாரிகள் மேற்படி காரணத்தின் அடிப்படையில் விண்ணப்பங்கள் அனுப்பியிருந்த போதிலும் அவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படாததால் அவர்கள் சிரமத்துக்கு உள்ளாகவில்லை.

(ை) முகமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் புள்ளிகள் வழங்கப்படுவதற்கான அளவுகோல்கள் பெற்றுத் தரப்பட்டுள்ளன.

அவையாவன:-

1. துறைக்குரியதாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள மேலதிக சேவை அனுபவம்
2. துறைக்குரியதாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள மேலதிக கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்
3. மேலதிக அடைவுகள்
4. நேர்முகப் பரீட்சையின் போது வெளிப்படுத்தப்படும் திறன்.

மேற்படி இலக்கங்களின் கீழ் புள்ளி வழங்கப்படுதல் அந்தந்த நேர்முகப் பரீட்சைச் சபையினால் மேற்கொள்ளப்படும். இது மேற்படி பதவிக்கு மட்டுமல்ல ஏனைய அனைத்து பதவிகளுக்காகவும் பின்பற்றப்படுகின்ற முறையாகும். சில நேர்முகப்பரீட்சை சபைகளில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் உயர்மட்ட பிரதிநிதிகள் காணப்பட்டதோடு நிர்வாகத்துறையின் உயர்மட்ட பிரதிநிதிகளும் பங்கேற்கச் செய்யப்பட்டனர். அந்த அனைத்து நேர்முகப்பரீட்சை சபைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அளவுகோள்களுக்கு அமைய புள்ளிகளைத் தீர்மானித்துள்ளன.

(ஸை) இப் பதவிக்காக கணக்கு மற்றும் நிதித்துறை ஆகியவற்றில் அனுபவம் பெற்றிருப்பது அவசியமாகும். குறித்த விண்ணப்பதாரி 13 வருடங்களுக்கும் அதிகமான காலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாங்க நிறுவனங்களில் சிரேட்ட பதவிநிலை பதவிகளில் பணியாற்றியிருந்தார்.

தேசிய கல்வி நிறுவகத்தில் பிரதான உள்ளகக் கணக்காய்வாளராக இடையறாத 08 வருடகால சேவை அனுபவமும், தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபையில் உதவிப் பொது முகாமையாளர் ( நிதி) ஆக இடையறாத 05 வருடகால சேவை அனுபவமும் பெற்றிருந்தார்.

ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையில் கணக்குத் துறையில் அல்லது நிதித்துறையில் சேவை அனுபவம் இருக்கவேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. இதிலே அல்லது என குறிப்பிடப்படுவதன் மூலம் தெளிவாக இரண்டு துறைகளில் பணியாற்றுவதற்கான சேவை அனுபவம் கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பட்டயக் கணக்காளராக ஏற்றுக்கொள்ளப்படுவது கணக்காய்வுக் கம்பெனி ஒன்றில் 03 அல்லது 04 வருடகாலம் பணியாற்றி பெற்றுக்கொள்ளும் சேவை அனுபவமாகும். எனவே கணக்காய்வுத் துறையில் சேவை அனுபவமானது நிதிச் சேவை அனுபவமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே குறிப்பட்ட தெரிவுசெய்யப்பட்ட அலுவலர் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார்.

### 4.8 வாகனப் பயன்பாடு

பணியகத்தில் 48 வாகனங்கள் இருந்ததோடு அவற்றுக்குப் போதுமான அளவு சாரதிகளும் பணியாளர்களும் இல்லாதமையினால் இவ்வாறு இடம்பெற்றுள்ளது. தற்போது சாரதிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு வருவதோடு அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட 09 வாகனங்களையும கருத்திற்கொண்டு அவற்றுக்கு ஏற்ற வகையில் சாதிகளின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதற்காக அனுமதி கோரி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இச் செயன்முறை இடம்பெற்றதன் பின்னர் சகல வாகனங்களுக்கும் சாரதிகளை ஈடுபடுத்த முடியும்.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கங்களை அடைந்து கொள்ளுதல்

நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக பணியகத்தினால் எதிர்வரும் 05 வருடங்களுக்குரிய செயற்பாட்டுத் திட்டம் ஒன்று பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றது.

## 6. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்.

### 6.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுதல்

மீளாய்வாண்டின் இறுதியில் பணியகத்தில் தலைவர் ஒருவர் இருக்கவில்லை என்பதோடு இறுதி நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டு கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் தலைவராகிய பொதுத் திறைசேரியின் பிரதிநிதியின் ஒப்பத்துடன் குறித்த தினத்தில் நிதி அறிக்கைகள் அரசாங்கக் கணக்காய்வு பிரிவுக்கும் அமைச்சுக்கும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இன்றைய தலைவர் 2018.03.01 ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்றதோடு அதன் பின்னர் உரிய நிதி அறிக்கை 2018.03.01 ஆம் திகதி அரசாங்கத்தின் கணக்காய்வு பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 6.2 உள்ளகக் கணக்காய்வு

(அ) பணியகத்திற்கான பதவியணிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடவடிக்கை முறையை அங்கீகரித்துக்கொள்வதில் ஏற்பட்ட தாமதம் இதற்கு காரணமாக அமைந்தது. இருப்பினும் தற்போது ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறை அங்கீகரிக்கப்பட்டுள்ளதனால் தற்போது அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியில் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

(ஆ) உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்படும்போதும் நிர்வாக மற்றும் நிதி போன்ற துறைகளுக்கான கணக்காய்வுத் திட்டங்கள் தயாரிக்கப்படும்போதும் குறிப்பிட்ட துறைகளின் பணிகள் விபரமாக உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றபோதிலும் அகழ்வு மற்றும் புவிச்சரிதவியல் துறைகளுக்கான கணக்காய்வுத் திட்டங்கள் தயாரிக்கப்படும்போது குறிப்பிட்ட இரண்டு துறைகளுக்கான செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் விபரமாக கணக்காய்வுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் எதிர்கால கணக்காய்வுத் திட்டங்களை

### 6.5 ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுதல்

2014 தொடக்கம் 2016 வரையிலான அறிக்கைகள் ஏற்கனவே பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 6.6 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

(அ) தற்போது இப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

(ஆ) இந்த விடயம் தொடர்பாக ஆராயும் பொருட்டு 2015 அக்டோபர் 13 ஆம் திகதி மூன்று நபர்களைக் கொண்டமைந்த குழு ஒன்றுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதோடு அதன்மூலம் முன்னாள் பணிப்பாளர் நாயகம் இப் பொருட்களை பெற்றுக் கொள்ளவில்லை என்பது வெளிக்கொணரப்பட்டது. இது இலக்கமிடுதலுக்காக வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்ட ஒரு பொருள் மீண்டும் களஞ்சிய ஆவணங்களில் குறிப்பிடப்படுதலாகும். இதனை கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) கொடுப்பனவுகள் செலுத்தப்படும் சந்தர்ப்பத்தில் மேற்படி உத்தியோகத்தர்கள் குறித்த உரிமையைக் கொண்டுள்ள பதவிகளிலும் சம்பள படி நிலைகளிலும் இருந்துள்ளதனாலும் அதற்குரியதாக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதனாலும் மேலதிக செலுத்தல்கள் இடம்பெறவில்லை.

(ஈ) இத் தனியார் கம்பெனியானது இலங்கை கனிய மணல் கம்பெனியினால் மேற்கொள்ளப்படுகின்ற பதப்படுத்தல் நடவடிக்கைகளிலிருந்து அகற்றப்படுகின்ற மணலை கேள்விப் பத்திரங்களின் மூலம் பெற்றுக் கொண்டதன் பின்னர் அவர்களது கைத்தொழிற்சாலையில் மீண்டும் மேற்கொள்ளப்படுகின்ற சுத்திகரிப்பின் பின்னர் கனிப்பொருள் ஏற்றுமதி செய்கின்றது. 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சட்டத்தின் 2 ஆ பிரிவின் பிரகாரம் கனிம பொருட்களின் உரிமையானது அரசாங்கம் கொண்டிருப்பதன் அடிப்படையில் அறவிடப்படுகின்ற உரிமப் பணம் கனிமத்தின் பெறுமதிக்கு மட்டும் அறவிடப்படுகின்றது. இலங்கை கனிய மணல் கம்பெனியினால் தனியார் கம்பெனிக்கு கனிப் பொருள் விற்பனை செய்கின்ற சந்தர்ப்பத்தில் மேற்படி உள்நாட்டுப் பெறுமதியில் சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக 6மூ உரிமப் பணம் (அரசிறை) செலுத்தப்படுகின்றது. அதன் பின்னர் வாடிக்கையாளர் ஆகிய தனியார் கம்பெனியினால் பதப்படுத்தல் நடவடிக்கையின் பின்னர் ஏற்றுமதியின்போது கப்பற் கட்டணம் இன்றி பெருமதியினை கொள்வனவுகளிலிருந்து கழித்து எஞ்சிய உரிமப் பணம் 7மூ பணியகத்தினால் அறவிடப்படும். கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வகையில் குழுடி பெறுமதியானது போலியான வகையில் காட்டப்பட்டுள்ளதா என்பதனை பரிசோதித்துப் பார்ப்பதற்காக புதிய அறிக்கைகளை சம்பந்தப்பட்ட கம்பெனியில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு ஏற்கனவே கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

(உ) இப்பெறுமதியிலிருந்து ஒரு பகுதி அகற்றப்பட்டுள்ளது.

### 6.7 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றுதல்

(அ) தற்போது பல அனுமதிப்பத்திரதாரிகள் பணியகம் திருப்தி அடையக்கூடிய வகையில் காணிகளை புனரமைப்புச் செய்துள்ளனர். அவ்வாறு புனரமைப்பு செய்யப்பட்ட குழிகள் மேற்பார்வை செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் வங்கிப் பிணை முறிகள் விடுவிக்கப்படும். புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாத அனுமதிப் பத்திரதாரிகளுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அவ்வாறான மீறல்களை மேற்கொள்ள வேண்டாமென எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்படுவதோடு அனுமதிப் பத்திரங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படும். அதன் பின்னர் மீண்டும் மேற்கொள்ளப்படுகின்ற களப்பரிசோதனையின் பின்னர் அனுமதிப்பத்திரதாரிகளுக்கு கடுமையான எச்சரிக்கைக் கடிதங்கள் விநியோகிக்கப்பட்டு அனுமதிப்பத்திரம் வலுவுடையதாக்கப்படும். அவ்வாறு அமையாத சந்தர்ப்பங்களில் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வகையில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் பற்றிய துறையினை முன்னேற்றுவதற்கு விசேட கவனம் செலுத்தப்படும்.

அசேல இத்தவல
தலைவர்
புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம்



# கணக்காய்வுக் குழு அறிக்கை

## கணக்காய்வு குழு அறிக்கை

இயற்கை வளங்கள் மற்றும் சுற்றாடலை பாதுகாக்கும் பணியில் இடையறாத ஈடுபாட்டை கொண்ட, மக்கள் நம்பிக்கை வைத்துள்ள நல்லாளுகைச் செயற்பாட்டு வரம்பினுள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அரசாங்கத்திற்கு சொந்தமான ஒழுங்குபடுத்தல் நிறுவனமொன்றை கட்டியெழுப்புதல்.

நல்லாளுகைக்கான அரச தொழில் முயற்சி வழிகாட்டியின் தொழிற்பாட்டு நெறிமுறைகளை ஆதாரமாகக் கொண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ள பட்டயத்தில் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் கணக்காய்வு குழுவினது விதிகளும் பொறுப்புக்களும் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் கணக்காய்வு குழுவானது முகாமைத்துவ சபையின் 03 உறுப்பினர்களை கொண்டுள்ளதோடுதிறைசேரியை பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர் இக்குழுவிற்கு தலைமை தாங்குவார். இக்குழுவின் உறுப்பினர்களது பெயர்கள் பின்வருமாறு,

1. திரு பீ. அல்கம - தவிசாளர் (பணிப்பாளர் தலைமை அதிபதி - அரச நிதிக் கூட்டுத்தாபனம்)
2. திரு எம்.பீ.யூ.டி.கே மாபாபத்திரண - உறுப்பினர் (மேலதிகப் பணிப்பாளர்,சுற்றாடல் மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சு)
3. திருமதி ஜே.எம்.ஆர்.ஆர்.கே.ஜயசுந்தர - உறுப்பினர் (உதவி பணிப்பாளர் கைத்தொழில் அபிவிருத்தி - கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு)

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவகுழுவின் விதிகள் மற்றும் பொறுப்புகள், கம்பெனியின் நிதி மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய நடவடிக்கைகளை நியாயமான முறையில் நிறைவேற்றுவதற்காக கணக்காய்வு முகாமைத்துவ குழு பணிப்பாளர் சபைக்கு தொடர்ச்சியாக பங்களிப்பு வழங்கி வருகிறது.

கணக்காய்வு முகாமைத்துவ குழுவுக்கு பின்வரும் பணிகளை ஆற்றுவதற்கான அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது

விசேட கணக்காய்வு திட்டம், தாபனத் திட்டம், செயற்பாட்டுத் திட்டம், பெறுகைத் திட்டம், வருடாந்த வரவு செலவு மற்றும் மூலதன வரவு செலவுகளை மீளாய்வு செய்தல்.

கணக்கிட்டுக் கொள்கைகளின் தரம் மற்றும் ஏற்புடைமை, கணக்கிட்டு கொள்கைகளிலும் நடவடிக்கை முறைகளிலும் செய்யப்படுகின்ற மாற்றங்கள் அத்துடன் சம்பந்தப்பட்ட கணக்கீட்டு நியமங்களின் சட்ட ரீதியான மற்றும் நிருவாக ரீதியான இயைபினை மீளாய்வு செய்தல்.

கணக்காய்வு அறிக்கையை அடிப்படையாக கொண்ட கணக்கிட்டு, நிதி மற்றும் தொழிற்பாட்டுக் கூறுகள் அத்துடன் பணிப்பாளர் சபையில் முகாமைத்துவம் தொடர்பான தீர்மானங்களை உள்ளடக்கும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை மதிப்பீடு செய்தலும் மீளாய்வு செய்தலும்.

சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள், திறைசேரி சுற்றறிக்கைகள் மற்றும் விடுக்கப்படும் பணிப்புரைகளின் இயைபினை மீளாய்வு செய்தல்.

குழுவின் முடிவுகளை முகாமைத்துவ சபைக்கு ஆற்றுப்படுத்தல்.

நிறுவனம், பதவி அணியினரின் ஒழுக்கம், செயலாற்றுகை, புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தை கூருணர்வு மற்றும் பயனுறுதி வாய்ந்தஒரு நிறுவனமாக மாற்றி அமைக்கும் நோக்கத்துடன் அவசியமற்ற செலவுகள், ஊழல் ஒழிப்பு போன்ற விடயங்களுடன் சம்பந்தப்பட்டதான மீளாய்வு.

இலஞ்சம் தொடர்பான இடர் வரவுகளை குறைத்துக் கொள்வதற்காக பொருத்தமான நுண்ணாய்வுகளை மேற்கொள்ளுதல்.

## குழுக் கூட்டங்கள்

2017ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவுற்ற நிதியாண்டில் நான்கு குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. குழுக் கூட்டங்கள் தொடர்பான விடயங்கள் முறையாக அறிக்கையிடப்பட்டு பணிப்பாளர் சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்படும். இவ்வாறு நடத்தப்படும் கூட்டங்களில் உறுப்பினர்களின் பங்கேற்றல் பின்வருமாறு அமையும். குழுவின் அழைப்பின் பேரில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின்

பிரதிநிதி இந்த ஆண்டில் நடத்தப்பட்ட கூட்டங்களில் பங்கேற்றுள்ளார்.

2017ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் கட்டமைப்பு 2017ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட மொத்தக் கூட்டங்களின் எண்ணிக்கையில் பங்கேற்பை உறுதிப்படுத்திய கூட்டங்களின் எண்ணிக்கை

| | |
|---|---|
| திரு பீ. அல்கம | 04 |
| திரு எம்.பீ.யூ.டி.கே மாபாபத்திரண | 04 |
| திருமதி ஜே.எம்.ஆர்.ஆர்.கே.ஜயசுந்தர | 04 |

## உள்ளக கணக்காய்வு

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரின் நிருவாகத்தின் கீழ் இயங்கும் கணக்காய்வு பிரிவொன்றைக் கொண்டுள்ளது. உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டு அங்கீகாரம் பெறப்படுவதோடு இந்தக் குழு தொடர்ச்சியாக உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளின் பரீட்சித்தல்களையும் மீளாய்வு செய்கின்றது.

## வெளிவாரியான கணக்காய்வு


இயைபுறாமை, முறைசாரா கணக்கீடு மற்றும் அறிக்கையிடல் தொடர்பான பிரச்சனைகளுக்கு உரிய காலத்தில் தீர்வு காணும் வகையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினால் மீளாய்வு செய்யப்படும்.

## முடிவு

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் உள்ளக கட்டுப்பாட்டை பயனுறுதியாக நடைமுறைப்படுத்துவதாகவும், நிறுவனத்தின் சொத்துக்கள் முறையாக பாதுகாக்கப்படுவதாகவும் அத்துடன் உள்ளக கணக்காய்வுப் பிரிவு ஆண்டு பூராகவும் பயனுறுதி மற்றும் சுயாதினமாக இயங்கியுள்ளதாகவும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு திருப்தியடைகிறது. மேலும், கணக்கிட்டு கொள்கைகளின் பயன்பாடு தொடர்பிலும் குழு திருப்தியடைவதோடு புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்தின் நிதிக்கூற்றுக்கள் நம்பகத் தன்மை கொண்டவை என்பது அதனூடாக நியாயமான முறையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இயைபாக செய்யப்பட்டுள்ளது என்பது பணியகத்தின் வடிவமைப்பு பணியூடாக உறுதிப்படுத்தப்படுவதாக முழு திருப்தியடைகிறது. மீளாய்வு அண்டினுள் அறிக்கையிடப்பட்டுள்ள இயைபுறாமை தொடர்பில் நிவர்த்தி செய்தல்களும் தவிர்ப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பீ. ஆல்கம
தவிசாளர்
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு



# நிறுவனத்தின் சமூகப் பொறுப்புக்கள்

# நிறுவனத்தின் சமூகப் பொறுப்புக்கள்

## கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்

கற்பாறைகளை வெடிவைத்து தகர்த்தல் தொடர்பான சான்றிதழ் கற்கை நெறி

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் கன்னுதல் பிரிவு மிக நீண்ட காலமாக நிலவிய ஒரு தேவையைப் பூர்த்தி செய்யுமுகமாக பாதுகாப்பு அமைச்சு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஒத்துழைப்புடன் இலங்கையில் கற்பாறைகளை வெடிவைத்து தகர்த்தல் தொழில்நுட்பம் மற்றும் மேற்பார்வை தொடர்பான மூன்று மாதகொண்ட கற்கைநெறி ஒன்றை நடாத்தியது.

வெடிவைத்து தகர்ப்பதற்காக பயன்படுத்தப்படும் பொருட்கள், வெடி வைத்தல் வழிமுறைகள், கட் குழிகளில் வெடி வைத்தலுடன் சம்பந்தப்பட்ட சமூக மற்றும் சுற்றாடல் ரீதியான தாக்கங்களின் கோட்பாட்டு அறிவினையும் செய்முறை அறிவினையும் வழங்குதல் இந்த கற்கைநெறியின் பிரதான நோக்கமாகும்.

இந்த கற்கைநெறியை வருடாந்தம் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு வெடி வைத்தல் நடவடிக்கைகளின் பயனுறுதியும் பாதுகாப்பு தர நியமங்களும் இதனூடாக மேம்படுத்தப்படும். 2017ஆம் ஆண்டில் இரண்டு கற்கைநெறிகள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளன

கன்னுதல் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வுகளும் கருத்தரங்குகளும்

கன்னுதல் நடவடிக்கையோடு சம்பந்தப்பட்ட பிரதான கைத்தொழில் சார்ந்த பிரச்சனைகளுக்குத் தீர்வு காணல் மற்றும் கனிப்பொருட்கள், சுரங்கங்கள் சட்டத்தின்படி பணியகத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் தொடர்பில் அரச நிறுவனங்கள், உரிமம் பெறுனர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வு செய்வதற்காக கன்னுதல் பிரிவு கருத்தரங்குகளை நடாத்தியது. கனிப்பொருட்கள் மற்றும் சுரங்கங்கள் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகத்திற்கும் பிரதேச செயலகங்கள் போன்ற அரச நிறுவனங்களுக்குமிடையில் காணப்படவேண்டிய தொடர்பினை மேம்படுத்தல், இலங்கையில் சுற்றாடலுடன் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பில் பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வு செய்தல் இதன் நோக்கமாகும்.





| செயலமர்வு.்.விழிப்ர்ணர்வு நிகழ்ச்சித்திட்டம் | திகதி | தலைப்பு |
|---|---|---|
| கேகாலை மாவட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான அலுவலர்களுக்காக நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம். | 2017.07.21 | வர்த்தகம் அல்லாத நோக்கத்திற்காக சரளைக் கல் மற்றும் மணல் உரிமம் வழங்கல் |
| காலி மாவட்டத்தில் பொலிஸ் உத்தியோ-கத்தர்களுக்காக நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம். | | |
| மாத்தறை மாவட்டத்தில் இராணுவத்தினருக்காக நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம். | | |
| காலி மற்றும் மாத்தறை மாவட்டத்தில் உரிமம் பெற்றவர்களுக்காக நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம். | | |

## தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம்

கம்பஹா மாவட்டத்தில் பத்தஹபொக்குன தொல்பொருளியல் வளாகத்தை அண்டிய உடுகம்பொல பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட மரநடுகை நிகழ்ச்சித்திட்டம்.

கம்பஹா மாவட்டத்தில் பத்தஹபொக்குன தொல்பொருளியல் வளாகத்தை அண்டிய உடுகம்பொல பிரதேசத்தில் அரச உத்தியோகத்தர்கள், கன்னுதல் உரிமம் பெற்றவர்கள் மற்றும் கிராமவாசிகளின் பங்கேற்புடன் 2017.06.05ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட மரநடுகை நிகழ்ச்சித்திட்டம்



















மட்டக்களப்பு மாவட்டத்தின் மாவடியாறு பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட மரநடுகைத் திட்டம்

அரச உத்தியோகத்தர்கள், கன்னுதல் உரிமம் பெற்றவர்கள் மற்றும் கிராமவாசிகளின் பங்கேற்புடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் மாவடியாறு ஆற்றின் கரையோரம் நெடுகிலும் 2017.06.13ஆம் திகதி மரநடுகை நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பதுளை மாவட்டத்தின் தெமோதர கற்குழி வளாகத்தில் முன்னெடுக்கப்பட்ட மரநடுகை நிகழ்ச்சித்திட்டம்

அரச உத்தியோகத்தர்கள், கன்னுதல் உரிமம் பெற்றவர்கள் மற்றும் கிராமவாசிகளின் பங்கேற்புடன் பதுளை மாவட்டத்தின் தெமோதர கற்குழி வளாகத்தை அண்டியதாக 2017.06.05 ஆம் திகதி மரநடுகை நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.


களுத்துறை மாவட்டத்தில் மே மாதம் ஏற்பட்ட பாரிய வெள்ளப்பெருக்கின் பின்னர் பாடசாலைகளில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் அலுவலர்கள் அத்துடன் கிராமவாசிகளின் பங்கேற்புடன் களுத்துறை மாவட்டத்தில் ஹல்வத்துர வித்தியாலயத்திலும் பொலொஸ்ஸகம வித்தியாலயத்திலும் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

குருணாகல் மாவட்டத்தின் மாத்தாவ பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட மரநடுகை நிகழ்ச்சித் திட்டம்

அரச உத்தியோகத்தர்கள், கன்னுதல் உரிமம் பெற்றவர்கள் மற்றும் கிராமவாசிகளின் பங்கேற்புடன் குருநாகல் மாவட்டத்தின் மாத்தாவ பிரதேசத்தில் 2017.06.05 ஆம் திகதி மரணத்தை நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# Geological Survey & Mines Bureau







புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்

ஆண்டறிக்கை

www.gsmb.gov.lk